Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 மாசி 10 ஆம் நாள், ஹிஜ்ரி 1426 முஹறம் 01 (22.02.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ் :144

மொறாயஸ் ஒளிச்சுடர்

பல்வ ஃபோக்கஸ் கண்ணாடியகம்

இல.05 பலாலி வீதி, (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.



- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீனரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.

(1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)

(சி-2195)

# யாழ்ப்பாணத்தில் சுயேட்சையாக போட்டியிட ஆனந்தசங்கரி திட்டம்!

(யாழ்ப்பாணம்)

**தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் சுயேட்சையாகப் போட்டியிடவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

**தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஏனைய முக்கியஸ்தர்களுடன் முரண்பட்டுள்ள ஆனந்தசங்கரி தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் இணைந்து செயற்படவில்லை.**

இந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் பட்டியலில் இடம் கிடைக காத வீ.ஆனந்தசங்கரி யாழ்.மாவட்டத்தில் தனித்துப் போட்டியிடத் தீர்மானித்திருப்பதாக கூறப்படுகிறது.

நேற்றுக்காலை விமானம் மூலமாக யாழ்ப்பாணம் வந்த ஆனந்தசங்கரி ஸ்ரான்லி வீதியிலுள்ள கூட்டணி அலுவலகத்தில் தங்கியிருக்கிறார்.

இவர் தமது நெருங்கிய ஆதரவாளர்கள் சிலரைச் சந்தித்துப் பேச்சு நடத்திய போதும் தமது அரசியல் நிலைப்பாடு குறித்தோ தேர்தலில் போட்டியிடுவது குறித்தோ செய்தியாளர்களுக்கு எதுவும்கூற மறுத்துவிட்டார்.

தனது முடிவு நாளை வெளியிடப்படும் என்று மட்டுமே குறிப்பிட்ட ஆனந்தசங்கரி நாடாளுமன்றத் தேர்தலில் சுயேட்சைக்குழு ஒன்றுக்குத் தலைமையேற்றுப் போட்டியிட இருப்பதாக கூறப்படுகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடுவதற்கு கட்சியின் செயலாளர் ஆர்.சம்பந்தனின் ஒப்புதல் பெறப்படவேண்டும் என்பதாலேயே சுயேட்சை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டொரு நாட்களில் எனது முடிவு தெரியவரும்!

### பி.பி.ஸிக்கு ஆனந்தசங்கரி பேட்டி

(லண்டன்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளர்களை முறைப்படி தேர்வுசெய்யத் தவறினால் தமிழ் மாவட்டங்கள் அனைத்திலும் விடுதலைப் புலிகளே வேட்பாளர்களைத் தெரிவு செய்து நிறுத்திப் போட்டியிட வேண்டுமெனவும் அவர்கள் விரும்பினால் உதய சூரியன் சின்னத்தைப் பயன்படுத்தலாம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு - அம்பாறையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாளை வேட்பு மனுத்தாக்கல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பு மனுக்கள் நாளை தாக்கல் செய்யப்படவுள்ளன.

கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப்பரராஜசிங்கம் தலைமையில் ஏழுபேர் வேட்பாளர் பட்டியலில் அடங்குகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத தலைவரும் வர்த்தகர் சங்கத் தலைவருமான இராஜன் சத்தியமூர்த்தி, களுதாவளையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற விவசாயப்பணிப்பாளரும் தற்போதைய நியாப்திட்ட அதிகாரியுமான தனமண்பிள்ளை கனகசபை, ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளரும் தமிழர் புனர்வாழ்வுக்கழக மட்டக்களப்பு மாவட்டத்தலைவருமான கிங்ஸலி இராசநாயகம் அம்பிலாந்துறையைச் சேர்ந்த ஊடகவியலாளரும் தமிழ் அலை பத்திரிகை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி வீதி விபத்தில் யாழ்.இளைஞன் மரணம்!

(கிளிநொச்சி)



கிளிநொச்சியில் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்ற வீதி விபத்துச் சம்பவம் ஒன்றில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் மரணமானார்.

நேற்றுமுன்தினம் இரவு 7 மணிக்கு இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

கிளிநொச்சியிலிருந்து ஏ9 வீதி வழியாக புளியங்குளம் நோக்கிச் சென்ற ஹையேஸ் வான் ஏ9 வீதியில் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிளை 155 ஆம் கட்டைப் பகுதியில் வைத்து பின்பக்கமாக மோதியது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த 24 வயதான இராமலிங்கம் மனோகரன் என்ற இளைஞர் அந்த இடத்திலேயே மரணமானார்.

திருமணமாகி ஒரு குழந்தையின் தந்தையான இந்த இளைஞர் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைச் சேர்ந்தவர் எனத் தெரியவருகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரி நகர்ப் பகுதியில் சீருடையில் வந்தவர்களால்

## ஈ.பி.டி.பி - வரதர் அணி கூட்டணி அமைத்து போட்டி

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் ஈ.பி.டி.பியும், ஈ.பி.ஆர்.எல்.எவ் (வரதர் அணி) உம் இணைந்து போட்டியிடவுள்ளன.

### சாவகச்சேரி நகர்ப் பகுதியில்

# சீருடையில் வந்தவர்களால் 1 கோடி ரூபா நகை கொள்ளை

## துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் காயம்

(சாவகச்சேரி)

கடைக்கு நகைகளை எடுத்துச் சென்ற இளைஞன் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்து விட்டு ஒருகோடி ரூபா பெறுமதியான நகைகளை இராணுவ சீருடையில் வந்தவர்கள் பட்டப்பகலில் துணிகரமாக திருடிச் சென்ற சம்பவம் நேற்று சாவகச்சேரி நகரப் பகுதியில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த இருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

சாவகச்சேரி நகரின் டச்சுவீதியில் உள்ள வீட்டிலிருந்து, நகரிலுள்ள வீ.எம்.கே. ஜீவலர்ஸ் இற்கு நேற்றுக் காலை 8.45 மணியளவில் சண்முகம் சதீஸ்குமார் என்ற இளைஞர் நகைகளை எடுத்துச் சென்று கொண்டிருந்தார்.

அப்போது இராணுவ சீருடையில் - இரண்டு மோட்டார் சைக்கிள்களில் முகத்தை கறுப்புத் துணியால் மூடிக்கட்டிக்கொண்டு ஆயுதபாணியாக வந்தவர்கள் துப்பாக்கிப்பிரயோகம் செய்து விட்டு அவரிடமிருந்த நகைகள் அடங்கிய பெட்டியை அபகரித்துச் சென்றனர்.

ஹீரோ ஹொண்டா மற்றும் எம்.டி 90 ரக மோட்டார் சைக்கிள்களில் வந்த திருடர் குழுவினர் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் நகை எடுத்துச் சென்ற நகைக்கடை ஊழியரான சண்முகம் சதீஸ்குமார் (வயது 29) காலிலும், சத்தியசீலன் துவாரகன் (வயது 15) எனற பாடசாலை மாணவனும் காயமடைந்தனர்.

இவர்கள் இருவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி – வரதர் அணி கூட்டணி அமைத்து போட்டி

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் ஈ.பி.டி.பியும், ஈ.பி.ஆர்.எல்.எவ் (வரதர் அணி) உம் இணைந்து போட்டியிடவுள்ளன.

வடக்கு - கிழக்கிலுள்ள அனைத்துத் தேர்தல் மாவட்டங்களிலும் மற்றும் கொழும்பு மாவட்டத்திலும் இந்த இரு கட்சிகளும் இணைந்து வேட்பாளர்களை நிறுத்தியிருப்ப தாக ஈ.பி.டி.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொ.ஐ.முக்கியஸ்தர் இன்று கட்சி தாவுவார்!

பொது ஜன ஐக்கிய முன்னணியின் முக்கியஸ்தர் ஒருவர் இன்று ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்ளவுள்ளதாக நேற்றிரவு கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் பொ.ஐ.முன்னணியின் பல உறுப்பினர்கள் ஐ.தே.கவில் இணைந்து அந்தக் கட்சியின் உறுப்புரிமையைப் பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

## அரசபடைகள் – புலிகளுக்கு இடையில் மீண்டும் போர் ஏற்படச் சாத்தியமில்லை!

### கண்காணிப்புக்குழுத் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் மீண்டும் யுத்தம் மூளுவதற்கு சந்தர்ப்பம் இல்லை என போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் புறூவ் ஹொவ்டே தெரிவித்தார்.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்பாடு கைச்சாத்திடப்பட்டு இரண்டு வருடங்கள் நிறைவடைவது தொடர்பாக கருத்துத் தெரிவித்த புறூவ் ஹொவ்டே-

இரு தரப்புகளும் போருக்குத் திரும்ப வேண்டிய கட்டத்தை தாண்டியிருக்கின்றன.

பலமான சர்வதேச ஆதரவுக்கு மத்தியில், இரண்டு வருட காலப் போர்நிறுத்தம் உறுதியாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

யுத்தத்தை நிறுத்தி நாட்டின் பல பாகங்களிலும் இயல்பு நிலையை ஏற்படுத்த காரண

(12 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் அமைச்சர் மகேஸ்வரன் கொழும்பில் போட்டியிடுகின்றார்!

(கொழும்பு)

முன்னாள் இந்துசமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் ஐக்கிய தேசிய முன்னணியில்-கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடவுள்ளதாகத் தெரியவருகிறது.

கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசிய முன்னணி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் போட்டியிடவுள்ளது. இந்த வேட்பாளர் பட்டியலிலேயே முன்னாள் அமைச்சர் தி.மகேஸ்வரனும் இடம்பெற்றிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த வேட்பாளர் நியமனப் பத்திரத்தில் முன்னாள் அமைச்சர் மகேஸ்வரன் நேற்று கையெழுத்திட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த 2001 ஆம் ஆண்டுத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்ட மகேஸ்வரன்,

இந்த நாடாளுமன்றத் தேர்தலில் தாம் வடக்கு - கிழக்கில் போட்டியிடப் போவதில்லை எனவும், வடக்கு - கிழக்கு அரசியலில் இருந்து ஒதுங்கிக்கொள்ளப் போவதாகவும் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# தமிழீழ தேசிய விளையாட்டு விழா இரண்டாம் நாள் போட்டி முடிவுகள்

தமிழீழ தேசிய விளையாட்டு விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றன. தமிழீழ மாணவர் அமைப்பின் கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பாளர் கௌரி தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். அம்பாறை மாவட்ட விளையாட்டு அதிகாரி அப்துல்நபார் வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் விளையாட்டுத் துறை உதவிப் பணிப்பாளர் மரியதாஸ் தற்போதைய உதவிப்பணிப்பாளர் கே. - டபிள்யூ.விமலராஜன், தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுபபாளர் ராணிமைந்தன் மற்றும் மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் நிலான் (மட்டு), ரதன் (வவுனியா), கவியாளன் (மன்னார்), மாதுளன் (யாழ்ப்பாணம்), ராஜா (கிளிநொச்சி) ஆகியோர் மாவீர்களின் படங்களுக்கு ஈகைச்சுடரேற்றி மலர் மாலை அணிவித்தனர்.

தொடர்ந்து மருதநகர் உதயதாரகை மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியில் வவுனியா அணி அம்பாறை அணியை 7:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. வவுனியா அணியின் சார்பில் அரவிந்தன் 4 கோல்களையும், தவராஜா 2 கோல்களையும், ரூபன் 1 கோலையும் போட்டனர். பிரதம நடுவராக ந.யோகலிங்கம் கடமையாற்றினார்.

கிளிநொச்சி பொதுவிளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆண்களுக்கான தாச்சிப் போட்டியில் யாழ்ப்பாண அணி மன்னார் அணியை 18:3 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. பெண்களுக்கான தாச்சிப் போட்டியில் மட்டு அணி சமூகமளிக்காத நிலையில் திருகோணமலை அணி வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது. இந்தப் போட்டிகளுக்கு நடுவர்களாக ஜெயவீரன் கடமையாற்றினார்.

பெண்களுக்கான கபடிப் போட்டியில் கிளிநொச்சி அணி அம்பாறை அணியை 47:11 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றது. ஆண்களுக்கான கபடிப் போட்டியில் அம்பாறை அணி கிளிநொச்சி அணியை 31:27 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றது. இந்தப் போட்டிக்கு ஜஸ்ரின், அபேகுணசேகரா, விமலசேகர ஆகியோர் கடமையாற்றினர்.

50 ஓவர் கொண்ட துடுப்பாட்டப் போட்டியில் வவுனியா - மன்னார், அணிகள் மோதின. போட்டி ஆரம்பமாவதற்கு முன்னதாக வீரர்கள் வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் விளையாட்டுத்துறை உதவிப் பணிப்பாளர் மரியதாஸ் தற்போதைய உதவிப் பணிப்பாளர் கே.டபிள்யூ விமலராஜன் மற்றும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்ற எதிர்வீரசிங்கம் ஆகியோருக்கு அறிமுகம் செய்து வைக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற வவுனியா அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. 29.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 204 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. இந்த அணிசார்பில் வினோத்குமார் 48 இளங்குமரன் 40 அணித்தலைவர் கௌசிகன் 28 ஓட்டங்களை பெற்றுக்கொண்டனர். எட்வேட் கிளாஸ் 3 வினோசன், ஜோவியஸ் தலா இரண்டு விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மன்னார் அணி 28 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. அமல்ராஜ் 58 ஓட்டங்களையும் மோகனகுமார், றொபின்சன் ஆகியோர் தலா நான்கு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இந்தப் போட்டியில் வவுனியா அணி 44 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. நடுவர்களாக செல்வராசா, முருகவேள் ஆகியோர் கடமையாற்றினர். நிதர்சனம் நிறுவனத்தின் அனுசரணையுடன் மூன்றாவது நடுவராக இ.சிறிதரன் கடமையாற்றினார்.

பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் அம்பாறை மாவட்ட அணி கிளிநொச்சி மாவட்ட அணியை 2:0 என்ற செட் கணக்கிலும் யாழ் மாவட்ட அணி மட்டு.மாவட்ட அணியை 2:0 என்ற செட் கணக்கிலும் வென்றது.

பிற்பகல் மின்னொளியில் ஆரம்பமான உதைபந்தாடடப் போட்டியில் திருமலை மாவட்ட அணி யாழ். மாவட்ட அணியை 1:0 என்ற கோல் கணக்கிலும், முல்லை மாவட்ட அணி மட்டு மாவட்ட அணியை 1:0 என்ற கோல் கணக்கிலும் வெற்றி கொண்டன. திருமலை அணியின் சார்பில் சுதாகரனும் முல்லை அணியின் சார்பில் சுகந்தனும் கோல் அடித்தனர்.

ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் திருமலை மாவட்ட அணி மன்னார் மாவட்ட அணியை 3:2 என்ற செட் கணக்கில் வெற்றிகொண்டது.

கிளிநொச்சி மன்னார் மாவட்டங்களுக்கிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் மன்னார் மாவட்டம் 4:1 என்ற கோல் கணக்கில் வென்றது.

மன்னார் மாவட்டம் சார்பில் டிக்கோனி 2, ஜி.ஏ.டெவின்சன் 1, ஜி.ஏ. பெரேரா 1 கோல்களைப் போட்டனர். கிளிநொச்சி சார்பில் எஸ்.ரமேஸ்காந் 1 கோலைப் போட்டார். மன்னார் திருமலை மாவட்டங்களுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டியில் திருமலை 3:2 என்ற செற் கணக்கில் வென்றது.

மன்னர் வவுனியா மாவட்டங்களுக்கிடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் மன்னார் 38:16 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது. (108)

## சங்கிலி அறுத்த திருடனை தாக்கிய பயணியின் துணிவு!

### வவுனியா புகையிரத நிலையத்தில் சம்பவம்

கொழும்பிலிருந்து வவுனியாவை நோக்கி வந்துகொண்டிருந்த இரவுநேர புகையிரதத்தில் பயணம் செய்த பயணியொருவரின் தங்கச்சங்கிலியை அறுத்த திருடன் பயணியின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் தங்கச்சங்கிலியை எறிந்துவிட்டு புகையிரதத்திலிருந்து குதித்து ஓடிவிட்டான்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது - கடந்த திங்கட்கிழமை கொழும்பிலிருந்து வவுனியாவை நோக்கி வந்துகொண்டிருந்த புகையிரதத்தில் பயணம் செய்த அரசாங்க உத்தியோகத்தருக்கும் அவரது மகனுக்குமே இந்த நிலை ஏற்பட்டது.

இந்தப் பயணியும் அவரது மகனும் புகையிரதத்தின் 2 ஆம் வகுப்பில் பிரயாணம் செய்துகொண்டிருந்தனர். பிரயாணிகள் குறைவாகக் காணப்பட்ட இந்தப் புகையிரதம், மகோ சந்தி நிலையத்திலிருந்து புறப்பட்டுச் சிறிது தூரம் சென்றவுடன் குறிப்பிட்ட பெட்டியில் பாய்ந்த திருடன் தூக்கத்திலிருந்த பயணியின் சங்கிலியை அறுத்துக் கொண்டபோது, பயணி திடீரெனத் திருடனைத் தாக்கத் தொடங்கினார். அதற்கு ஈடுகொடுக்க முடியாமல் அறுத்த சங்கிலியை போட்டுவிட்டு அந்தத் திருடன் பாய்ந்து ஓடிவிட்டான். (17)




# சின்னஞ்சிறு செய்திகள்

## மருந்தாளர் சங்கத்தின் பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட ஆங்கில மருந்தகங்களின் பொதுச்சபைக் கூட்டமும் நிர்வாகத்தெரிவும் இன்று காலை 10.30 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக்கூட்டத்தில், மருந்துப் பொருட்களின் விலை நிர்ணயம், மொத்த சில்லறை வியாபார நடவடிக்கை முரண்பாடுகள், மருந்தக வர்த்தகர் அல்லாத வர்த்தகர்கள் மருந்துகளை இறக்குமதி செய்வது தடைசெய்தல் போன்ற முக்கிய விடயங்கள் குறித்து தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளன.

இந்தத் தீர்மானங்களின் பின்பு புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெறவுள்ளது. புதிய நிர்வாகத் தெரிவுக்காக அனைத்து மருந்தக உரிமையாளர்களையும் தவறாது கூட்டத்தில் கலந்துகொள்வதுடன் மருந்தகங்களின் சீரான நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு நல்குமாறு யாழ். மாவட்ட ஆங்கில மருந்தகங்களின் சங்கங்கள் கேட்டுள்ளன. (205)

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேச செயலக ஒழுங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் வியாழக்கிழமை செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்திற்கு உள்ளூர் திணைக்களத்தலைவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் பொது அமைப்பு பிரதிநிதிகளைத் தவறாது கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர் பேரானந்தன் கேட்டுள்ளார்.

## நெடுந்தீவு துறைமுகத்தில் மலசலகூடம் அமைப்பு!

(நெடுந்தீவு)

நெடுந்தீவு துறைமுகப் பகுதியில் அமைந்துள்ள கிழக்கு சனசமூக நிலைய வளாகத்தில் பயணிகள் நன்மைகருதி பொது மலசலகூடம் ஒன்று அமைக்க கனடா ஒன்றியத்தினர் நிதிஉதவி வழங்கியுள்ளனர்

வெளியிடங்களில் இருந்துவரும் மற்றும் உள்ளூர் பிரயாணிகளும் தற்போது துறைமுகப் பகுதியின் பாதுகாப்பான ஒரு பொது மலசலகூடம் இன்மையால் பெரும் சிரமப்படுவதனை அவதானித்தே இப்பகுதியில் மலசலகூடம் அமைப்பதற்கான நிதியினை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (113)

## ஒன்றியத்தின் நிர்வாகிகள் தெரிவு

யாழ்.நல்லூர் பிரதேச தனியார் கல்வி நிலையங்களின் ஒன்றியத்தின் இந்த ஆண்டிற்கான நிர்வாக சபை உறுப்பினர் தெரிவு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

ஒன்றியத்தின் தலவராக வ.புவனேஸ்வரன், உபதலைவர் ஆர். அருட்செல்வன், செயலாளர் எல்.பிரதாபன் உபசெயலாளர் எஸ்.சுபநாதன், பொருளாளர் மு.ஜெயந்திரகுமார் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டதுடன் நிர்வாகசபை உறுப்பினர்களாக இரா. செல்வவடிவேல், மீரா அருள்நேசன், ச.வாமதேவன் மு.சிறிதரன் , ஞான. திருக்கேதீஸ்வரன், பி.பாஸ்கரன், ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். இவர்களால் நடப்பாண்டு தனியார் கல்வி நடைமுறைகளும் மாற்றம் செய்யப்பட்டது. (205)

## சமுர்த்தி வங்கி திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சமுர்த்திவலயம் இரண்டுக்கான சமுர்த்தி வங்கியின் திறப்பு விழா இன்று காலை 10 மணிக்கு பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணியசர்மா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி திலகநாயகம் போல் சமுர்த்தி உதவி ஆணையாளர் தி.மகேஸ்வரகுமார் சண்டிலிப்பாய் உதவிப்பிரதேச செயலர் அ.யோ.எழிலரசியும்,

அத்துடன்கௌரவ விருந்தினர்களாக சண்டிலிப்பாய் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ச.செல்வராசா, உதவித்திட்டப் பணிப்பாளர் மு.பாலசிங்கம் கணக்காளர் க.சுகந்தினி, கிராம அலுவலர் ம. தயாநந்தன் ஆகியோருடன் சண்டிலிப்பாய் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் எஸ். பவநிதனும் கலந்துகொள்ளவுள்ளனர். (44)

## 22 ஆவது நினைவையொட்டி பரிசளிப்பு விழா

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் 22 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குறித்த சமாசமும், புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியமும் இணைந்து எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் பரிசளிப்பு நிகழ்வும் பாராட்டு விழாவையும் நடத்தவுள்ளன.

## பூசைகளின்றி மூடப்பட்டிருக்கும் நெடுந்தீவு இந்து ஆலயங்கள்!

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மத்தி, கிழக்கு பகுதிகளில் உள்ள இந்து ஆலயங்கள் பூசைகள் இடம்பெறாமல் கடந்த பல நாட்களாக பூட்டிய நிலையில் உள்ளமையால் இந்துக்கள் மத்தியில் பெரும் விசனம் ஏற்பட்டுள்ளது. பரம்பரையாக இங்கேயே இருந்து பூசை செய்து வந்த பூசகர் குடும்பம் தீவை விட்டுச் சென்றமையே இந்த நிலைக்குக் காரணம் என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

பல நாட்களாகியும் இது தொடர்பாக இங்குள்ள ஆலய நிர்வாகத்தினரோ இந்து அமைப்புக்களோ எந்தவித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. இது தொடர்பான சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கும் நெடுந்தீவு பிரிவுக்கு ஒரு கலாசார உத்தியோகத்தரும் நீண்டகாலமாக நியமிக்கப்படாமையும் ஒரு காரணமாகும். கடந்த கால நிதி ஒதுக்கீடுகள் மூலம் பெருந்தொகை நிதியைப் பெற்று புனரமைக்கப்பட்ட ஆலயங்கள் இன்று பூசைகள் இன்றி பூட்டிக்கிடக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (113)

நிறைஞ்சனாஸ் சங்கானை
ஜோதிகா, ரம்பா, லைலா, விவேக் நடித்த
த்ரீ றோசஸ்
காட்சி நேரம்:11.00, 2.45, 6.00, (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
DUNGONS DRAEONS
(சி-2196)

ராஜா யாழ்ப்பாணம்.
விஜயகாந்த், வடிவேலு, பிரபுதேவா, பாண்டியராஜன் நடித்த

எங்கள் அண்ணா
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(சி-2197)

யசோ இறபர் ஸ்டாம்
75/=
பொலிமர் கொம்பியூட்டர் இறபர் சீல் ரூபா 75/= மட்டுமே
யசோ (PVT) லிமிட்டட்,
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி/2152)

விற்பனையாளர் தேவை
எமது நிறுவனத்துக்கு விற்பனையாளர்கள் தேவை.
ஆசீர் வணிக நிலையம்,
202 A, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-2234)

# சந்திரிகாவின் கூட்டணியில் அதாவுல்லா அணி இணைவு!

முஸ்லிம் தேசிய முன்னணி என்ற பெயரில் புதிய கட்சி ஒன்று ஆரம்பித்துள்ள - முன்னாள் போக்குவரத்துப் பிரதியமைச்சர் ஏ.எல்.எம் அதாவுல்லா, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ளார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து பிரிந்துசென்று தனித்து இயங்கிவந்த ஏ.எல்.எம் அதாவுல்லா, அன்வர் இஸ்மாயில், எச்.எல்.எம்.ஹரீஸ், ஆகிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து புதிய கட்சியை உருவாக்கியுள்ளனர்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் ஏ.எல்.எம். அதாவுல்லா இந்தத் தகவலை வெளியிட்டார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்பதால் தமது கட்சி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்துகொண்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்து கொண்ட அதாவுல்லா, ஜனாதிபதி சந்திரிகாவின் முன்னிலையில் நேற்றுமுன்தினம் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவில் கைச்சாத்திட்டதாகத் தெரியவருகிறது.

அதாவுல்லா மற்றும் நான்கு முன்னாள் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும், கிழக்கு மாகாணத்தில் தமது முன்னணியில் போட்டியிடவிருப்பதாக ஐக்கிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிறேம் ஜெயந்த தெரிவித்தார்.

இதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் நேற்றுமுன்தினம் மேலும் இரு கட்சிகள் இணைந்துகொண்டன. லங்கா சமசமாஜக் கட்சி மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன புதிய கூட்டணியில் இணைந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## கட்சித் தாவல் தொடர்கிறது

சிறிலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த சில சிரேஷ்ட உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக கட்சியுடன் இணைந்து வருகின்றனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற ஊறுப்பினர் பி.பி மாவல்லகே, தென்மாகாணசபை உறுப்பினர்களான வீரசிங்க வீராத்ன, விஜபால ஹெட்டி ஆராய்ச்சி, நந்த சேன ஹெரத், வடமத்திய மாகாண சபைத் தலைவர் பண்டார உடகதெர ஆகியோர் ஐக்கிய தேசியக்கட்சியின் உறுப்புரிமையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் இருந்து பெற்றுக்கொண்டனர்.

## வன்முறைகளைத் தடுக்க பொலிஸ் அலுவலகம் திறப்பு!

(கொழும்பு)

நடைபெறப்போகும் பொதுத்தேர்தலை முன்னிட்டு வன்முறைச் சம்பவங்களைத் தடுப்பதற்கென தனியான பொலிஸ் அலுவலகம் நிறுவப்பட்டது.

கடந்த 12 ஆம் திகதி இந்த அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது.

தேர்தலுக்கு முந்திய வன்முறைகள் என்ற அடிப்படையில் இதுவரை 15 வன்முறைச் சம்பவங்கள் இந்த அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி 06 முறைப்பாடுகளையும், பொதுஜன ஐக்கிய முன்னணி 6 முறைப்பாடுகளையும் செய்துள்ளன.

ஏற்கனவே, பல வன்முறைச் சம்பவங்கள் முறைப்பாடுகள் அற்ற நிலையில் இடம்பெற்றிருக்கின்ற போதிலும் இந்த 15 முறைப்பாடுகளுடன் அவை சேர்க்கப்படவில்லை. (01)

## சிங்கள பூமிபுத்திர கட்சி, சுயேட்சை வவுனியாவில் வேட்புமனு தாக்கல்!

(வவுனியா)

எதிர்வரும் ஏப்ரல் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக பெரும்பான்மை இனக்கட்சி ஒன்று வவுனியா மாவட்டத்திற்கான வேட்புமனுக்களை அரச செயலகத்தில் தாக்கல் செய்துள்ளது.

சிங்கள பூமிபுத்திர கட்சியே தனது வேட்பாளர் பட்டியலை நேற்றுமுன்தினம் வவுனியா அரச அதிபர் கே.கணேசிடம் கையளித்தது.

குபேந்திர பெரேரா தலைமையிலான ஒன்பது வேட்பாளர்களின் பெயர்கள் அடங்கிய வேட்புமனுவை சிங்கள பூமிபுத்திர கட்சியின் செயலாளர் வவுனியாவில் தாக்கல் செய்தார்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் வன்னி மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு சுயேட்சைக் குழுவைச் சேர்ந்த இருவர் வவுனியா செயலகத்தில் நேற்றுமுன்தினம் கட்டுப்பணத்தைச் செலுத்தினர்.

கபீர் முஹமட் சலீம், சித்திக் அக்பர், முகமது சாதீக் ஆகியோரை முதன்மை வேட்பாளராகக் கொண்ட சுயேட்சைக் குழுக்களே தேர்தலில் போட்டியிட கட்டுப்பணததைச் செலுத்தின.

இவர்கள் வேட்புமனுக்களை நாளை மறுதினம் தாக்கல் செய்யவுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை வன்னி மாவட்டத்திற்கு சென்ற முஸ்லீம் காங்கிரஸின் பிரமுகர்கள் பிரசார நடவடிக்கைகளை நேற்றுமுன்தினம். ஆரம்பித்தனர்.

தமது கட்சியைச் சேர்ந்த மூவர் மன்னார் மாவட்டத்திற்கு தெரிவாவர் என்றும் தமது கட்சிக்கு தேர்தலில் வாக்களிக்குமாறும் அவர்கள் கோரிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.(07,03)

## 35 சுயேட்சைக் குழுக்கள், 15 கட்சிகள் வேட்புமனுக்களை தாக்கல் செய்தன!

(கொழும்பு)

பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கான மனுக்களின் அடிப்படையில் 35 சுயேட்சைக் குழுக்களும், 15 கட்சிகளும் இதுவரை வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருக்கின்றன.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 22 மாவட்டங்களில் 262 வேட்பாளர்கள் பங்கேற்கும் வகையில் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யவுள்ளது.

23 ஆம் 24 ஆம் திகதிகளில் தமது வேட்புமனுக்களை தாக்கல்செய்ய, ஐக்கிய தேசியக் கட்சி முடிவுசெய்துள்ளது. ஜாதிக ஹெல உறுமய நேற்றுமுன்தினம் தனது வேட்புமனுக்களை கொழும்பில் தாக்கல் செய்தது.

இதேவேளை - இடம்பெயர்ந்து வாழும் வடக்கு - கிழக்கு மக்களின் நன்மை கருதி அவர்கள் வாக்குகளை பதிவுசெய்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நடவடிக்கையில் தேர்தல் திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

ஆறு லட்சத்து முப்பத்து மூவாயிரத்து நானூற்று ஐம்பத்தேழு பேர் 2001 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த நிலையில் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தபோதும் 4 லட்சத்து 50 ஆயிரம் பேர் மட்டுமே வாக்களிப்பு இடம் பெறும் இடங்களில் இருந்தனர்.

2001 ஆம் ஆண்டில் நடந்த தேர்தலில் வாக்களித்தவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 97 ஆயிரம் ஆகும்.

இந்த எண்ணிக்கை பதிவுசெய்யப்பட்ட வாக்குகளில மூன்றில் ஒரு பங்காகும்.

கிழக்குப் பகுதியில் மூன்றில் இரண்டு பங்கினரே வாக்களித்திருந்தனர்.

வன்னிப் பகுதியில் நடந்த தேர்தலில் அரைப் பங்கினரே வாக்களித்தனர என்பது குறிப்பிடத்தக்கது.

## ரணில் - ஹக்கீம் இடையே இரு சுற்றுப் பேச்சுக்கள் முடிவு!

தேர்தல் வேட்பாளர் தெரிவிற்கு சில நாட்களே இருக்கின்ற நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கும் இடையில் இரண்டு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடந்து முடிந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தைகளின்போது தமது கட்சி பத்து செயற்திட்டங்களை முன்வைத்திருப்பதாகவும், இதனடிப்படையில் ஐக்கிய தேசிய முன்னணியுடன் தேர்தல் கூட்டு ஒன்றை ஏற்படுத்துவது குறித்து தாம் நம்பிக்கையுடன் உள்ளதாகவும் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸ் வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் ஏகோபித்த ஆதரவை பெற்ற கட்சியாக உள்ளமையால், அங்கே முஸ்லிம்கள் சார்பாக எவரையும் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிட அனுமதிக்கக் கூடாது என பிரதமரிடம் தான் கோரிக்கை விடுத்ததாக ஹக்கீம் கூறினார்.

ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த முஸ்லிம் வேட்பாளர்களில் தலா ஒருவரை சகல மாவட்டங்களிலும் முஸ்லிம் காங்கிரஸின் கீழ் போட்டியிட வைப்பதற்கான கோரிக்கையும் பிரதமரிடம் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## தேர்தலில் ரத்வத்த போட்டியிட ஜனாதிபதி சந்திரிகா தடை!


முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையை வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட வேண்டாமென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கேட்டுக்கொண்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அவருக்கு தேசியப் பட்டியல் நியமனம் வழங்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்ததாகவும் இந்தத் தகவல்கள் கூறுகின்றன.

கடந்த பொதுத் தேர்தலில் அனுருத்த ரத்வத்த போட்டியிட்ட கண்டி மாவட்டத்திலேயே தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்பட்டதாக கணிப்பீடுகள் மூலம் தெரியவந்துள்ளது.

அத்துடன், கடந்த தேர்தல் காலத்தில் பல முஸ்லிம் இளைஞர்கள் இந்த மாவட்டத்தில் படுகொலை செய்யப்பட்டதோடு, அதற்கான சூத்திரதாரிகளான அனுருத்த ரத்வத்தையும், அவரது புதல்வர்களும் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த வழக்கு இன்னமும் முடிவடையாத நிலையில், பாதுகாப்புக் காரணங்களை கருத்தில் கொண்டே ஜனாதிபதியால் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.



திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடும் சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர்கள்.

## தேர்தல் நடவடிக்கைகளின் போது சமாதான முன்னெடுப்பே அவசியம்!

### அமெரிக்க தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டாலும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் சமாதான முன்னெடுப்புத் தொடர்பாகவே தமது தேர்தல் நடவடிக்கைளை மேற்கொள்ள வேண்டும்.

அமெரிக்க நாட்டின் யு.எஸ்.எயிட். நிறுவனத்தால் நடத்தப்பட்ட "ரேக் திஸ் றோட்" என்ற தொலைக்காட்சி தொடரை ரூபவாஹினி சேவையில் ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லன்ஸ்ரீட் தெரிவத்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

சமாதான முயற்சிகள் மூலமாகவே கண்ணிவெடி அகற்றல் போன்ற செயற்பாடுகள் தற்போதும் நாட்டில் நடைபெற்றுவருகின்றன.

இந்தத் தொலைக்காட்சி தொடர்மூலம் இலங்கையில் வாழும் ஒவ்வொரு சமூகமும் மற்றைய சமூகத்தை புரிந்துகொள்ள முடியும். இந்தத் தொடர் மூலம் இங்குள்ள சமூகங்கள் தமது அன்றாட வாழ்க்கையை புரிந்துகொள்ள முடியும்.

அத்துடன் யு.எஸ்.எயிட். நிறுவனம் இலங்கையில் ஜனநாயகம், சமாதான முயற்சி, மனித உரிமைகள் மற்றும் பொருளாதார வளர்ச்சி, நிதிநிலை ஸ்திரத்தன்மை போன்றவற்றை மேம்படுத்த செயற்படுமெனவும் தெரிவித்தார்.

## முதலி அம்மன் அலங்கார உற்சவம்

(வடமராட்சி)

தென் புலோலி ஸ்ரீமுதலி மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் அலங்கார உற்சவம் எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி, தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளன.

அடுத்த மாதம் இரண்டாம் திகதி வேட்டைத் திருவிழாவும் நான்காம் திகதி வெள்ளிக கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

# சுப்பலீக் போட்டிகளிலிருந்து அவுஸ்ரேலியா வெளியேற்றம்!

ICC U/19 CRICKET WORLD CUP BANGLADESH 2004

(டாக்கா)

பங்களாதேஷில் நடைபெற்றுவரும் 19 வயதிற்குட்பட்டோருக்கான, உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியில், முதனிலை லீக் ஆட்டங்கள் நேற்றுமுன்தினத்துடன் முடிவடைந்து, இன்றுமுதல் சுப்பலீக் ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன.

நேற்றுமுன்தினம் நடந்த லீக் போட்டிகளில் அவுஸ்ரேலிய - இலங்கை அணிகளுக்கிடையில் நடைபெற்ற பரபரப்பான போட்டிகளில் இரண்டு ஓட்டங்களால், அவுஸ்ரேலிய அணி வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி அவுஸ்ரேலியாவை துடுப்பெடுத்தாட முதலில் அழைத்திருந்தது. 50 ஓவர்களில் இந்த அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 186 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது. இலங்கை அணிவீரர் சுராஜ் 37 ஓட்டங்களைக் கொடுத்து, 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். தொடர்ந்து ஆட்டத்தினை ஆரம்பித்த இலங்கை அணியின் ஆரம்பமே மோசமாகவிருந்தது. 10 ஓட்டங்களுக்குள் 4 விக்கெட்டுக்களை இழந்த அணியை 5 ஆவது விக்கெட்டுக்காக ஜோடிசேர்ந்த ஜே.சில்வாவும் எம்.ம.ஃ.றூப்பும் தூக்கி நிமிர்த்திவிட்டனர். சில்வா 46 ஓட்டங்களையும் ம.ஃ.றூப் 56 ஓட்டங்களையும் பெற்ற போதும், பின்னர் வந்த ஆட்டக்காரர் எவரும் நிதானமாக விளையாடாததால் 184 ஓட்டங்களில் 49.1 ஓவரிலேயே அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து இரண்டு ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

பந்துவீச்சில் புட்லென்ட் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். ஆட்டநாயகனாக இரண்டு விக்கெட்டுக்களை கைப்பற்றி துடுப்பாட்டத்தில் 56 ஓட்டங்களைப் பெற்ற இலங்கை அணியின் எம்.ம.ஃ.றூப் தெரிவானார்.

சிட்டஹொங்கில் நடந்த இங்கிலாந்து-தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான மற்றைய ஆட்டத்தில் தென்னாபிரிக்கா, 1 விக்கெட்டால் வெற்றிபெற்றது.

முன்னதாக நாணயச்சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்கா, இங்கிலாந்தை துடுப்பெடுத்தாடப் பணித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 48.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து, 189 ஓட்டங்களைப் பெற்றது. இந்த அணியின் சார்பில் ஸ்ரீவன் டேவிஸ் கூடுதலாக 63 ஓட்டங்களைப் பெற்றன. பந்துவீச்சில், ஹேகான் ஆபிரிக்கா, வின்சென்சூ பென்னாஷா இருவரும் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

## விளையாட்டு

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா 47.3 ஓவர்களில், 9 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இந்த அணி சார்பாக வோகன்வான் யார்ஸ்வெல்ட் கூடுதலாக 76 ஓட்டங்களைப் பெற்றார். இவரே ஆட்ட நாயகனாகத் தெரிவானார். பந்துவீச்சில் ரின் பிறிஸ்ரன் 3 விக்கெட்டுக்களையும், லியாம், பிளங்கெட், லுக்கிறைட் தலா 2 விக்கெட்டுக்களையும், கைப்பற்றினர்.

டாக்காவில் நடந்த இந்திய - பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் இந்திய அணி 131 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற பங்களாதேஷ், இந்தியாவைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. இதன்படி, முதலில் ஆடிய இந்தியா



நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து, 309 ஓட்டங்களைப் பெற்றது. இந்திய அணி சார்பில், ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களான உதப்பா 59, டாவன் 120 ஓட்டங்களைக் கூடுதலாகப் பெற்றனர். பந்துவீச்சில் சவுட்கரி 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் 40.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 178 ஓட்டங்களையே எடுத்தது. அகமட் இந்த அணி சார்பாக 44 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் குப்தா, சர்மா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்ட நாயகனாக 120 ஓட்டங்களை எடுத்த டாவன் தெரிவானார்.

குல்னாவில் நடந்த மேற்கிந்தியத் தீவுகள்-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில், பாகிஸ் தான் 163 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முன்னதாக நாணயச்சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர் நிறைவில், 9 விக்கெட்டுக்களை இழந்து 251 ஓட்டங்களைப் பெற்றது. இந்த அணிசார்பாக மிர்சா 92, சயீட் 40 ஓட்டங்களைக் கூடுதலாகப் பெற்றனர். பந்துவீச்சில் பைச்சான் 3, மத்தியூ 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள்அணி 27.3 ஓவர்களில் 88 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. இந்த அணிசார்பில் சைமன்ஸ் 24 ஓட்டங்களை கூடுதலாகப் பெற்றார்.

பந்துவீச்சில் அப்ரிடி 5, ம.ஃ.மூட் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக அப்ரிடி தெரிவானார்.

சுப்பர் லீக் இன்று தொடங்கும் ஆட்டங்களின் விபரங்கள் வருமாறு-

'ஏ' பிரிவில் இலங்கை - சிம்பாப்வே, 'பி'பிரிவில் இங்கிலாந்து - தென்னாபிரிக்கா, 'சி'பிரிவில், இந்தியா - நியூசிலாந்து, 'டி' பிரிவில் பாகிஸ்தான் - மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் தெரிவாகியுள்ளன.

# ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் மகாஜனாவை வென்றது மத்திய கல்லூரி

யாழ்.மாவட்ட பாடசாலைக்களுக்கிடையே நடைபெற்று வருகின்ற கிரிக்கெட் போட்டித் தொடரில் கடந்தவாரம் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற, யாழ்.மத்திய கல்லூரி எதிர் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மற்றும் யாழ்.மத்திய கல்லூரி எதிர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணிகளுக் கிடையிலான ஒரு நாள் போட்டியில், யாழ்.மத்திய கல்லூரி அணி இலகுவாக இரு அணிக ளையும் வெற்றிகொண்டது.

இந்த போட்டிகளின் ஓட்ட எண்ணிக்கை விபரம் வருமாறு.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்கு எதிரான போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி 5 விக்கெட் இழப்பிற்கு, 50 ஓவர்களில் 258 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் வி.ரஜீவ்குமார் 87 ஓட்டங்களையும் ஏ.ஜசிந்தன் 40 ஓட்டங்களையும் கே. கனிஸ்ரன் 33 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்னர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி 124 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. யாழ்.மத்திய கல்லூரி அணியின் சார்பாக மயூரன் 3 விக்கெட்டுக்களையும் ஆர்.மதுசன் 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இதனால் இந்தப் போட்டியில் 134 ஓட்டங்களினால் யாழ்.மத்திய கல்லூரி இலகுவாக வெற்றி பெற்றது.

பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியுடனான மற்றைய ஒருநாள் போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி 256 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இதில் ஆர்.மதூஷன் 88 ஓட்டங்களையும், கே.கலிஸ்ரன் 51 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஹாட்லிக் கல்லூரி அணி 50 ஓவர்கள் முடிவில், 9 விககெட் இழப்பிற்கு 125 ஓட்டங்களை மட்டுமே பெற்றதால் இப்போட்டியில் 131 ஓட்டங்களினால், யாழ்.மத்தியகல்லூரி அணி வெற்றிபெற்றது. யாழ்.மத்தியகல்லூரியின் சார்பில் கே.கலிஸ்ரன் 3 விக்கெட்டுக்களையும், ஆர்.மதுசன், எஸ்.தினேஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியிருந்தனர்.

மேற்குறிப்பிட்ட இரு போட்டிகளுக்கும் முன்பாக முதல்வாரத்தில் நடந்த ஒரு நாள் போட்டியிலும் தெல்லிப்பழை ஸ்கந்தவரோதயாக்கல்லூரியுடனான போட்டியிலும், யாழ்.மத்தியகல்லூரி அணி வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது. (58)

# உதைபந்தாட்ட போட்டியில் மட்டக்களப்பு - யாழ். அணிகள் மோதிய போட்டி சமநிலையில்!

தமிழீழத் தேசிய பெருவிளையாட்டு விழாவில் உதைபந்தாட்டப் போட்டிகள் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணியளவில் ஆரம்பமாகின. இதில் முதல் போட்டி அம்பாறை -கிளிநொசசி அணிகளுக்கிடையில் நபைெற்றது. முன்னதாக இரு அணி வீரர்களும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வைத்திய கலாநிதி யூடி. ரமேஸ், ஜெயக்குமார் ஆகியோருக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

இந்தப் போட்டியில் கிளிநொச்சி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. கிளிநொச்சி அணி சார்பில் சா.சந்திரவர்மன் இரு கோல்களையும் சூ.ரெஜினோல்ட், மு.க.அன்ரனி, தி.சுதாகரன், செ.மே.ரமேஸ்காந்த் தலா ஒவ்வொரு கோலையும் போட்டனர். எம்.டி.பர்சூத் நடுவராக கடமையாற்றினார். அடுத்து நடந்த மன்னார் - வவுனியா மாவட்டங்களுக்கு இடையிலான போட்டியில் மன்னார் அணி 2:1 என்ற கோல் அடிப்படையில் வெற்றிபெற்றது. மன்னார் அணிசார்பில் நா.அ.டெவின்சன், கே.டிக்கோனி இருவரும் தலா ஒவ்வொரு கோலைப் போட்டனர். இந்த ஆட்டத்திற்கு நடுவராக யோகலிங்கம் கடமையாற்றினார்.

மின்னொளியில் நடந்த திருமலை - முல்லை மாவட்டங்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் திருமலை மாவட்ட அணி 1:0 என்ற கோல் கணக்கில் வென்றது. திருமலை மாவட்ட அணி சார்பாக ராஜா ஒரு கோலைப் போட்டார். இந்த ஆட்டத்தில் நடுவராக யோகலிங்கம் கட மையாற்றினார். மற்றைய மின்னொளிப் போட்டியில் மட்டக்களப்பு - யாழ்ப்பாண அணிகள் மோதின. இவ்விரு அணிகளுமே கோல்கள் எதுவும் போடாத நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. இந்த ஆட்டத்தில் நடுவராக வடிவேலன் கடமையாற்றினார். (108)

# இல்ல மெய்வன்மைப் போட்டிகள்

(ஆழியவளை)

வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி, நாளை பாடசாலை மைதானத்தில் அதிபர் வி.இந்திரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் பிரதம விருந்தினராகவும், மருதங்கேணி கோட்டக்கல்விப் அதிகாரி பா.ரகுநாதன், வடமராட்சி வலயக்கல்விக்கழகப் பொறுப்பாளர் சி.தாயகன் ஆகியோர் சிறப்புவிருந்தினராகவும் கலந்தகொள்ளவுள்ளனர். (122)

---

(தொண்டமானாறு)

யா.தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய வருடாந்த இல்லமெய்வன்மைப்போட்டி, இன்று பி.ப 2.00 மணிக்கு அதிபர் கணேசமூர்த்தி தலைமையில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. பிரதமவிருந்தினராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் என்.கே.சிவாஜிலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார். (76)

---

யா.கரணவாய் மகாவித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி, நேற்று பி.ப 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் எஸ்.நற்குணலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

பிரதமவிருந்தினராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் என்.கே.சிவாஜிலிங்கமும், சிறப்பு விருந்தினராக, வடமராட்சி கோட்டக் கல்வி அதிகாரி அம்பலவாணரும் கலந்து கொண்டனர்.

# யாழ். உதைபந்தாட்ட அணி அடுத்த மாதத்தில் தெரிவு!

(யாழ்ப்பாணம்)

லண்டனிலிருந்து வருகை தரவிருக்கும் 19 வயதுக்குட்பட்டோர் உதைபந்தாட்ட அணியுடன் விளையாடுவதற்காக, யாழ்.உதைபந்தாட்ட அணி தெரிவுசெய்யப்பட்டு, தொடர்ச்சியாக பயிற்சியளிக்கப்படவுள்ளது.

இதற்காக யாழ். நகரப்பாடசாலைகளிருந்து சிறந்த விளையாட்டு வீரர்களை மார்ச் 1ஆம் திகதி தொடக்கம் மார்ச் 07ஆம் திகதி வரை தினமும் பி.ப 4.00 மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறும். தெரிவுக்கு அனுப்பிவைத்து ஒத்துழைக்குமாறு, யாழ். உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் மு.பிரான்ஸிஸ் யாழ்.நகர பாடசாலைகளின் அதிபர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார். (58)

# சண்டிலிப்பாய் கோட்ட வலைபந்தாட்ட போட்டி

சண்டிலிப்பாய் கல்விக்கோட்டத்தில் நேற்று ஆரம்பமான வலைப்பந்தாட்ட போட்டிகள், எதிர்வரும 27 ஆம் திகதிவரை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மைதர்னத்தில் நடைபெறவுள்ளது. (72)

# அவுஸ்ரேலியா 84 ஓட்டங்களால் இலங்கை அணியை வென்றது!



இலங்கை - அவுஸ்ரேலிய அணிகளுககிடையில் பகல் இரவாக நேற்று முன்தினம் நடந்த சர்வதேச ஒருநாள் போட்டியில் அவுஸ்ரேலியா 84 ஓட்டங்களால் இலங்கையைத் தோற்கடித்தது. முன்னதாக நாணயச்சுழற்சியில் வென்ற அவுஸ்ரேலியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலியா, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து, 262 ஓட்டங்களைப் பெற்றது. இந்த அணி சார்ப்பில் கில்கிறிஸ்ற் 66, ஹைடன் 40, பொண்டிங் 58 ஓட்டங்களைப் பெற்ற அதேவேளை சைமன்ஸ் 20 பந்துகளில் ஒரு சிக்ஸர் 4 ப்வுண்டறிகள் அடங்கலாக 37 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் முரளிதரன், உபுல் சந்தன இருவரும் தலா 2 விக்கெட்டுக்களையும், ஜெயசூரிய 1 விக்கெட்டையும் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இலங்கைக்கு ஆரம்பமே மோசமாக அமைந்தது. ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாகிய ஜெயசூரிய மற்றும் களுவிதாரண ஆகியோர் 8, 2 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ரன அவுட்டானார்கள். அணித் தலைவர் அத்தப்பத்து 1 ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார்.

சங்ககார மற்றும் மஹேல ஜெயவர்த்தன இருவரும் நான்காவது விக்கெட் இணைப்பாட்டமாக நிதானமாக விளையாடி 145 ஓட்டங்களைப் பெற்று, அணியை இக்கட்டான நிலையிலிருந்து மீட்டனர். சங்ககார 58 ஓட்டங்களுடனும், மஹேல ஜெயவர்த்தன 61 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

இவர்களுக்கு பிறகு ஆடவந்த எவரையும் நிலைத்து நின்று ஆட அவுஸ்ரேலிய அணியின் சுழற்பந்துவீச்சாளர் பிரட்ஹொக் விடவில்லை. இறுதியில் இலங்கை 43.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 178 ஓட்டங்களையே எடுத்தது. இதில் சமிந்தவாஸ், குமார்தர்மசேன, முரளிதரன் மூவரும் ஓட்டம் எதுவும் பெறாமல் ஆட்டமிழந்தமையும் துரதிஷ்டவசமானது. பந்துவீச்சில் கிலெஸ்பி, பிரட்லீ, சைமன்ஸ் மூவரும் தலா ஒரு விக்கெட்டையும், பிரட்ஹொக் 5 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இந்தப் போட்டியில் ஆட்ட நாயகனாக பிறட்கொக் தெரிவானார். இந்த அணிகளுக்கிடையிலான இரண்டாவது போட்டி இன்று தம்புள்ள மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தில்

# பகிடிவதையில் ஈடுபடுவதை மாணவர்கள் குறைத்தனர்

## மாணவ ஆலோசகர் தெரிவிப்பு

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இம்முறை பகிடிவதையில் ஈடுபடுவதைக் குறைத்துள்ளமை மகிழ்வளிப்பதாகவுள்ளது என யாழ்.பல்கலைக் கழக சிரேஷ்ட மாணவ ஆலோசகர் கலாநிதி ப.புஸ்பரட்ணம் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழகத்திற்குப் புதிதாக அனுமதிக்கப்பட்டிருக்கும் மாணவர்கள் - கடந்தமாதம் முதல் கல்விச் செயற்பாடுகளை ஆரம்பித்திருப்பதால், இம்முறையும் பகிடிவதையில் மாணவர்கள் ஈடுபடுவது குறித்துக் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது -

கடந்த காலங்களில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் பகிடிவதையில் ஈடுபட்டதிலும் பார்க்க, இம்முறை அதிகளவான மாணவர்கள் ஈடுபடவில்லை என்றே கூற முடியும். குறிப்பாக மாணவர்கள் பகிடிவயில் ஈடுபடவில்லை என்றே கூறுமளவிற்கு மாணவாகளின் நடத்தையில் மாற்றத்தைக் காண முடிந்தது.

புகுமுக மாணவர்கள் அதிகளவில் மகிழ்வுடன் கற்கைநெறிகளுக்குச் சமூகமளிப்பதைக் காணமுடிகிறது. மாணவர்களின் அறிமுகம் மட்டுமே தற்போது இடம்பெற்று வருகிறது.

சிரேஷ்ட மாணவர்களின் வீடுகளுககுச் கனிஷ்ட மாணவர்களை அழைத்துச்சென்று பகிடிவதைக்குட்படுத்துவது, கீழ்த்தரமாக நடத்துவது போன்ற பல செயல்களை சிரேஷ்ட மாணவர்கள் கைவிட்டுள்ளனர்.

இனிவரும் காலங்களில் பகிடிவதையில் ஈடுபட்டுவரும் ஒருசில மாணவர்களும் இத்தகைய நடவடிக்கைகளைக் கைவிட்டுவிடுவர் என நம்புகிறேன்.

கல்வித்துறையில் யாழ்.பல்கலைக்கழகம் பல முன்னேற்றங்களைக் கண்டுள்ளது. இனவிடுதலைச் செயற்பாடானாலும் சரி, கல்வி மேம்பாடானாலும் சரி யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இன்று தனித்துவத்துடன் விளங்குமளவிற்கு யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் செயற்பட்டு வருகின்றனர். எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)

யாழ்.மாவட்டத்தில் போட்டியிட

# ஜாதிக ஹெல உறுமயவும் வேட்பு மனுவை கையளித்தது

எதிர்வரும் பொதுத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான இரண்டாவது வேட்புமனுவை ஜாதிக ஹெல உறுமய (சிஹல உறுமய) நேற்றுமுன்தினம் யாழ்.செயலகத்தில் தெரிவத்தாட்சி அலுவலரிடம் கையளித்தது.

யாழ்.மாவட்டத்தில் போட்டியிடவுள்ள 12 வேட்பாளர்களைக் கொண்ட பட்டியலை இந்தக்கட்சி சமர்ப்பித்தது. விதாரணதெனிய மேகாணந்த தேரர் தலைமையில் ஜாதிக ஹெல ஊறுமய கட்சியின் வேட்பாளர்களாகத் தெம்புகொட சீலதேரர், முலதியன தம்மசேன தேரர், தேகுந்தர தம்குறுச்சி தேரர், பிவல்லவே பஞ்சானந்த தேரர், போகன இந்திவெல தேரர், வலிமட சந்தகி மலகிட தேரர், புதுகல கின வஞ்சவில தேரர், வகவிசித்த வம்சகிது தேரர், வலிமட சாந்தகம தேரர், விலேபெட கத்தன தேரர், குடத் தாரத்தெனிய மேகானந்த தேரர் ஆகியோரே யாழ்.மாவட்டத்தில் போட்டியிடவுள்ளனர்.

# அடுத்த மாத நடுப்பகுதியில் வாக்காளர் அட்டை விநியோகம்

எதிர்வரும் ஏப்ரல் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தலுக்கான வாக்காளர் அட்டை விநியோகம் - அடுத்தமாதம் நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படும் எனத் தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் மார்ச் 16 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ள இந்த வாக்காளர் அட்டை விநியோகம், தேர்தல் தினத்தன்றுவரை வாக்காளர்கள் - வாக்காளர் அட்டைகளைப் பெற்று வாக்களிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடக்கு- கிழக்குப் பகுதியில் வாக்காளர் அட்டைகளை விநியோகிப்பதற்கு பாதுகாப்புப் படையினரின் ஒத்துழைப்பும் பெற்றுக்கொள்ளப்படவுள்ளன.

வாக்காளர் அட்டை விநியோகம் நடைபெறுகின்றபோது அசம்பாவிதங்கள் ஏதும் நடைபெறாது பாதுகாப்பதற்காகத் தபாலகங்களுக்கும் விசேட பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்படவிருக்கின்றன.

அத்துடன், தேர்தல் காலங்களில் பணியாற்றுவதற்குக் கண்காணிப்புக்குழுவின் உதவிகளை பெறுவதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது. இது தொடர்பாக அண்மையில் கண்காணிப்புக்குழுவின் தலைவர் புறூவ் ஹொவ்டேயுடன் நடைபெற்ற சந்திப்பின்போது இணக்கம் காணப்பட்டதாகத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார். (01)

முஸ்லிம் வட்டாரத்தில்

# காணி வாங்குவோர் விழிப்பாக இருக்கவும்

யாழ்ப்பாணம் முஸ்லிம் வட்டாரத்தில் காணிகள் விற்றல் - வாங்குதல் விடயத்தில் சம்பந்தப்படுபவர்கள் விழிப்பாக இருக்குமாறு முஹம் மதியா ஜீம்ஆ பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை கேட்டுள்ளது.

முஸ்லிம் வட்டாரத்தில் பரவலாக காணிகள் விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றில் சில போலிக் காணி உறுதிகளைப் பயன்படுத்தி விற்பனை செய்யப்படுவதனால், காணி உரிமையாளர்களும், காணி வாங்குபவர்களும் பல சந்தர்ப்பத்தில் ஏமாற்றப்படுகின்றனர். இந்த செயற்பாட்டில் சில முஸ்லிம் தரகர்கள் செயற்படுவதாகவும், இந்த விடயம் கண்டிக்கப்படவேண்டியது எனவும் யாழ்.முஸ்லிம் வட்டாரம் துண்டுபிரசுரம் வெளியிட்டுள்ளது.

இவ்வாறான காணிப்பிணக்குகள் சம்பந்தமாகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எனவே, காணிவாங்குபவர்கள் விழிப்பாக இருக்குமாறு மேலும் அந்த அறிக்கையில் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

# மருத்துவச் செடி வளர்ப்பதற்கு இடம் தருமாறு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

சித்தமருத்துவத்திற்கு வேண்டிய மருந்துகளை உற்பத்தி செய்வதற்கான செடிகளை வளர்ப்பதற்கு இடமொதுக்கித் தருமாறு யாழ்.சித்த மருந்து உற்பத்தி, விற்பனை வைத்திய சேவைக்கூட்டுறவுச்சங்கத்தின் முகாமைப்பணிப்பாளர் வைத்தியர் கே.கே.ஸ்ரீகணநாதன் - யாழ்.அரச அதிபரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட விளான் பகுதிக்கும், தொட்டிலடிப் பகுதிக்குமிடையிலுள்ள அரசகாணியில் 25 பரப்பு இதற்கென ஒதுக்கித் தரப்படுதல் வேண்டுமெனக் கோரியே தனது வேண்டுகோளை அரச அதிபருக்குச் சமர்ப்பித்தார்.

இப்பிரதேசத்தில் சகல இன மருந்துச்செடிகளும் வளர்க்கக்கூடிய வாய்ப்பிருப்பதாலேயே, இந்தப் பிரதேசத்தைச் சித்தமருத்துவப் பயிர் உற்பத்திக்கு ஒதுக்கித் தருமாறு கேட்டுள்ளதாகவும், யாழில் மிகவும் கூடியளவு சித்த மருத்துவப்பயிர் மூலமான மருந்துகளை உற்பத்தி செய்யக்கூடியதாக இருப்பதால், கூடிய வருமானததை ஈட்டக் கூடியதாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் காணியை ஒதுக்கித் தருவதற்குத் தாம் நடவடிக்கை எடுப்பதாக யாழ்.செயலக மேலதிக அரச அதிபர், மற்றும் சண்டிலிப்பாய் பிரதேசசெயலர் ஆகியோர் உறுதியளித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப)

## வட்டு இந்துக் கல்லூரியில் கணினிக் கற்கைநெறி

(அராலி)

வட்டு.இந்துக் கல்லூரியில் முறைசாரக்கல்விப்பிரிவினால் கணினி கற்கைநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தக் கற்கைநெறியைக் கற்க விரும்புபவர்கள் - கல்லூரி அலுவலகத்தில் அதற்குரிய விண்ணப்பப் படிவத்துடன் இன்று காலை 10 மணிக்கு வருமாறு பாடசாலை அதிபர் எஸ்.இராமலிங்கம் அறிவித்துள்ளார். (118)

# கோவில் வீதியில் மீன் விற்பனை

யாழ்ப்பாண மாநகரசபையின் ஆளுகைக்கு உட்பட்ட யாழ்ப்பாண பெருமாள் கோவில் முன்புறமுள்ள யாழ்பாடி வீதியில் மீன் விற்பனை செய்யப்பட்டுவருகிறது. இதனால், இந்த வீதியில் துர்நாற்றம் வீசுவதுடன், கோயில் பகுதியின் புனிதத் தன்மையும் பாதிப்படைகிறது.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது-

யாழ்ப்பாணம் வரதராஜப்பெருமாள் கோயில் வீதியின் அண்மையில் பொதுச்சந்தை ஒன்று இடம் பெயர்வுக்கு முன்பு இயங்கிவந்தது. இங்கு யாழ்.மாநகரசபையினரால் இது நடாத்தப்பட்டுவந்தது. இடம் பெயர்வின் பின் தற்போது அந்தப் பகுதியில் மரக்காலை ஒன்று இயங்கிவருகிறது. இதனால், மீன் வியாபாரம் செய்பவர்கள் யாழ்பாடி வீதியான பெருமாள் கோவில் முன் வீதியின் இருமருங்கிலும் நின்று வியாபாரம் செய்கின்றனர்.

எனவே, இவ்விடயத்தை மாநகர சபையினர் கவனத்திற்கொண்டு செயலாற்றவேண்டும் என மக்கள் எதிர்பார்ப்பதுடன், பழைய சந்தையினை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் கேட்டுள்ளனர். (205)






நாவலர் வீதியிலுள்ள சீ.சீ.எஸ். கணினிப் பயிற்சி நிலையத்தில் கற்கை முடித்து வெளியேறியவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில், பிரதம விருந்தினராக கலந்துகொண்ட விவசாயபீட பேராசிரியர் எஸ்.இராசதுரை மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும், மாணவியொருவருககு சான்றிதழ் வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# திலீபன் மருத்துவ நிலையத்தில் விசேட சிகிச்சை முகாம்

புங்குடுதீவில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ள தியாக தீபம் திலீபன் மருத்துவசேவை நிலையத்தில், விசேட மருத்துவ முகாம் அண்மையில் நடைபெற்றது. இதன்போது மருத்துவ சேவைகளும், ஆலோசனைகளும் நோயாளிகளுக்கு வழங்கப்பட்டது.

இந்த விசேட மருத்துவ முகாமில், வெளிநாட்டிலிருந்து வருகை தந்திருந்த இருதய வைத்திய நிபுணர் வைத்திய ஆலோசனைகளை வழங்கினார். இவருடன் விடுதலைப் புலிகளின் மருத்துவ நிபுணத்துவக் குழுவினரும் இணைந்து மருத்துவ சேவையை மேற்கொண்டனர்.

இதில் பொது மருத்துவ பரிசோதனைகளும், சிகிச்சைகளும் மேற்கொள்ளப்பட்டதுடன், விசேடமாக இனங் காணப்பட்ட இருதய நோயாளிகளுக்கு ஈ.சி.ஜி. பரிசோதனைகளும், சிகிச்சைகளும் வழங்கப்பட்டன.

கொக்குவில் இந்துக்கல்லூரி

# காணியில் கழிவுகள் கொட்டுவதால் அந்தப்பகுதியில் துர்நாற்றம் வீசுகிறது

கொக்குவில் இந்துக்கல்லூரிக்குச் சொந்தமான காணி ஒன்றில் பொது மக்களும், சிகையலங்கரிப்பு நிலையத்தினரும் குப்பைகள் கொட்டுவதால், அந்தப்பகுதி துர்நாற்றம் வீசுவதுடன், அருகிலுள்ள ஆலயத்தின் சூழல் தன்மையும் பாதிப்பு அடைகின்றது என, ஆலய நிர்வாகிகள் கவலை தெரிவித்தனர். இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

கொக்குவில் இந்துக் கல்லூரிக்குச் சொந்தமான மைதானத்திற்குப் பின் பகுதியிலுள்ள பெரிய வெற்றுக் காணியானது - பல காலமாக எந்த வித வேலி அடைப்புக்களும் இன்றி காணப்படுகிறது. இதனால், இந்தப் பகுதி மக்கள் இக்காணியை ஓர் குப்பை கொட்டும் இடமாகவே பாவிக்கின்றனர். அத்துடன், சிகையலங்கரிப்பு நிலையத்தினர் தம் கழிவுப் பொருட்களையும் இங்கு கொட்டுவதினால், தலைமுடிகள் காற்றில் பறந்து சுற்றுப்பகுதிக்கு பரவுவதாலும், சூழலமாசடைவதாகவும், அத்துடன் அந்தப் பகுதியில் பழமையான ஓர் ஆலயம் இருப்பதுவும், அங்கு வழிபடுவோருக்கு துர்நாற்றம், பிறவும் இடைஞ்சலாகக் காணப்படுகின்றன. பல தடவை இந்தக் கோயில் நிர்வாகத்தினர் பாடசாலையுடன் தொடர்புகொண்டு கேட்டுக்கொண்டபோதும், எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கோயில் பகுதிக்குப் புனிதம் ஏற்படுத்துவதற்குப் பாடசாலை நிர்வாகம் முள்வேலி அல்லது மதிலினை உடன் அமைக்குமாறு அந்தப் பகுதி மக்கள் கேட்கின்றனர். அத்துடன் கழிவு கொட்டுதல் பற்றி நல்லூர் பிரதேச சபையினரின் கவனத்திற்கு கொண்டுவந்தனர் (205)



ரிக்கிபொண்டிங், கங்கூலி - இருவல்லவர்கள்

# விளையாட்டு அரங்கம்

# சறுக்கல் எல்லாம் தோல்வியல்ல

முடிந்தும் முடியாத உணர்ச்சித் தொடரான இந்திய - அவுஸ்ரேலிய அணியின் போட்டித் தொடரைத் தொடர்ந்து, மூவேந்தர்களில் சக்கரவர்த்தி யார் என்பதை நிர்ணயிக்கும் போட்டித்தொடரான இந்திய - அவுஸ்ரேலிய - சிம்பாப்வே அணிகள் மோதிய முத்தரப்பு ஒரு நாள் சர்வதேச போட்டிகள், கடந்த 8 ஆம் திகதி நடைபெற்று முடிந்தன.

கிரிக்கெட் உலகின் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும்வகையில் அமைந்த இந்த முத்தரப்பு போட்டியில் புறக்கணிக்கமுடியாத புதுவேகத்தில் எழுந்த சிம்பாப்வே அணி ஒரு வெற்றிகூட பெற முடியாமல், இறுதிப்போட்டிக்கு வர முடியாமல் வெளியேறியது. மீதி அணிகளான தற்போதைய சம்பியனான அவுஸ்ரேலிய அணியும், அதற்கு நிகராக விளங்கிய இந்திய அணியும் இறுதிப் போட்டிக்கு தகுதி



கில்கிறிஸ்ட் - ஆயிரத்தில் ஒருவன்

பெற்றன.

அவுஸ்ரேலிய அணிக்கு அதன் சொந்த மண்ணில் வைத்து எந்த அணியும் கொடுக்காத தலையிடியை, இந்திய அணி இந்தச் சுற்றுப் பயணத்தில் கொடுத்தது. ஆனால், போட்டிகள் செல்லச்செல்ல இந்திய அணிக்கு ஆரம்பத்தில் இருந்த போர்க் குணமும், வெல்லவேண்டும் என்ற துடிப்பும் குறைந்துகொண்டே சென்றன. உண்மையில் இந்தப் போட்டித்தொடர் சற்று நீண்டதுதான். வீரர்களும் தொடர்ச்சியான போட்டிகளால் களைத்துப் போனார்கள் தான். அதற்காக இப்படி மோசமாகவா விளையாட வேண்டும். கடைசி இரு லீக் போட்டிகளிலும் இந்திய அணி ஆடிய திருக்கூத்துக்கு கங்கூலி சொன்ன பதில் நொண்டிச்சாட்டு - "பேர்த் மைதானம் எமக்கு இதுதான் முதல் தடவை அதனால் தான் அதிக ஓட்டங்களைக் குவிக்க முடியவில்லை" என்று. அது ஒருவகையில் நியாயமும்கூட. ஏனெனில், அவுஸ்ரேலிய அணியே பேர்த் மைதானத்தில் முதலாவது லீக் போட்டியில் 5 விக்கெட்டுக்களை இழந்துதான் வெற்றி இலக்கை அடையமுடிந்தது.

சரி பேர்த்மைதானம் தான் கைகொடுக்கவில்லை என்றால், இறுதிப் போட்டிகளில் முதல் இறுதிப் போட்டி நடைபெற்ற மெல்பேர்ன் மைதானத்தில் என்ன நடந்தது. இதே மெல்பேர்னில் முன்னர் நடைபெற்ற போட்டிகளில் **FIVE MAN ARMY** யும் சிறப்பாக ஆடினர். முதல் இறுதிப் போட்டியில் இதே **FIVE MAN ARMY** யும் எடுத்த ஓட்டங்கள் 53. அதிலும் சச்சின் 08, சேவாக் 03, கங்கூலி 06 ஆகிய ஓட்டங்களையே பெற்றனர். வழமையாக இவ்வாறான இக்கட்டான நேரத்தில் கைகொடுக்கும் யுவராஜ் சிங் அன்று 21 ஓட்டங்களையே பெற்றார்.

அந்தப் போட்டியில் இந்திய அணி திணறிக்கொண்டிருக்க உதவியவர்கள். ஹேமங் பதானியும், அஜித் அகர்கரும் தான். 75 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை இந்திய அணி இழந்து தவித்த போது, 7 ஆவது விக்கெட்டுக்காக இவர்கள் இருவரும் 102 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியை வலுப்படுத்தினார்கள்.

இந்தப் போட்டியிலும் பின்வரிசை துடுப்பாட்ட வீரர்களும், பந்துவீச்சாளர்களுமே அணிக்குக் கைகொடுத்தவர்கள்.

மூன்று போட்டிகளை கொண்ட இந்த இறுதிப் போட்டியில், இரண்டு போட்டிகளில் வெற்றி பெறும் அணியே தொடரைக் கைப்பற்றும்.

அந்த வகையில் இரண்டாவது போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றிருந்தால், மூன்றாவது போட்டி சுவாரசியமாக இருந்திருக்கும். ஆனால், இரண்டாவது போட்டியில் உலகக் கிண்ண இறுதிப்போட்டியில் தோற்றதைவிட மோசமாகத் தோற்றார்கள். செய்து காட்டுகிறோம் என்று கூறி சொதப்பி விட்டார்கள்.

இரண்டாவது போட்டியில் மீண்டும் ஒரு உலகக்கிண்ணப் போட்டியைக் காணமுடிந்தது. 2003 ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டியில் ரிக்கிபொண்டிங் என்றால் இந்தப் போட்டியில் மத்தியூ ஹேய்டன்.

நாணயச்சுழச்சியில் வெற்றி பெற்ற அவுஸ்ரேலிய அணி நிதானமாக ஆரம்பித்து, நேரம் செல்லச்செல்ல அதன் ஆட்டம் அதிரடியாக மாறத்தொடங்கியது.

மத்தியூ ஹேய்டன், டேர்மியன் மார்ட்டின், அன்ரூ சைமன்ஸ் ஆகியோர் இந்திய அணியை நன்றாகவே பதம் பார்த்தனர். 23 உதிரி ஓட்டங்களுடன் 359 ஓட்டங்களை அவுஸ்ரேலிய அணி பெற்றுக்கொண்டது.

இம்முறையும் ஒரு இமாலய இலக்கை நோக்கி இந்திய அணி துடுப்பெடுத்தாடத் தொடங்கியது.

முதலாவது ஓவரை சேவாக் - பவுண்டரி, சிக்ஸர் என்று அட்டகாசமாக ஆரம்பிக்க சிறிது நம்பிக்கை துளிர்த்தது. மறுபக்கம் சச்சின் நிதனமாக விளாச, ரசிகர்கள் மகிழத் தொடங்கினர்.

ஆனால், சேவாக் எதிர்பாராத விதமாக ஆட்டமிழக்க நம்பிக்கை தளரத்தொடங்கியது. அடுத்து லக்ஸ்மன் - சச்சினுடன் ஜோடி சேர்ந்தார். இதேஜோடி இதே சிட்னியில் இதே அவுஸ்ரேலிய அணியை ஒரு புரட்டுப் புரட்டியது.

இந்தப் போட்டியில் லக்ஸ்மன் 7 ஓட்டங்களுடன் பிரட்லீயிடம் ரசிகர்கள் எண்ணிப் பார்க்காத வகையில் ஆட்டமிழந்தார். அடுத்து சச்சின் - சேவாக் ஆட்டமிழந்த அதேமுறையில் ஆட்டமிழந்தார். இருந்த மிச்சமீதி நம்பிக்கையும் தகர்ந்தது.

தொடர்ந்து 120 போட்டிகளில் டக் அவுட் ஆகாத ராவிட் - இந்தப் போட்டியில் டக் அவுட்டானார். அடுத்து கங்கூலி, அணித் தலைவனுக்குரிய பொறுப்பை உணராமல் ஏனோ தானோ என்று விளையாடி, வேண்டுமென்றே ஆட்டமிழந்தது போல் ஆட்டமிழந்தார்.

இந்தப் போட்டியிலும் **DO OR DIE** என்று விளையாடியவர்கள் இர்பான் பதான், பதானி, கார்த்திக், நெஹ்ரா ஆகியோர்தான்.

கடந்த மூன்று போட்டிகளில் இந்திய அணியின் எரிச்சலூட்டும் விளையாட்டைப் பார்த்து, வெறுப்பின் உச்சத்திலிருந்த ரசிகர்கள் துடுப்பாட்டவரிசையை - பதான், பாலாஜி, கார்த்திக் என்று மாற்றியமைத்து, கங்கூலியை 11 ஆவது வீரராகக் களமிறங்கும்படியும், அவுஸ்ரேலிய அணி எடுத்த 359 ஓட்டங்களில் அரைவாசிகூட எடுக்காததால் பலோஓன் கொடுக்கும்படியும் கேட்கும் வாசகங்கள் எழுதிய பதாதைகளை உயர்த்தி உயர்த்திக் காட்டினார்கள்.

அவர்களின் கோபத்திலும் காரணமிருக்கிறது.

ஆனால், ஒரு அணி தொடர்ச்சியாக சிறப்பாக விளையாடவேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. வீழ்ச்சியும், எழுச்சியும் சகஜம்தான்.

சச்சின் - அஸாருதீன் தலைமையின் கீழ் இருந்த இந்திய அணியின் நிலையை விட, தற்போது கங்கூலியின் தலைமையில் இருக்கும் இந்திய அணி வலிமை மிக்க அணி என்பதில் சந்தேகமில்லை.

அவர்கள் சாதாரண அணியிடம் தோற்கவில்லை. உலகச் சம்பியன் அணியிடம்தான் தோற்றார்கள். மோதிரக்கையால் தான் குட்டுவாங்கினார்கள். இவ்வாறு திறமைமிக்க அணி தளர்வுற்று வீழ்ச்சி காணும்போது, ஊக்குவிக்க வேண்டியது ரசிகர்களின் கடமையேயாகும்.

அடுத்து வரும் பாகிஸ்தான் சுற்றுப் பயணத்தின்போது, இந்திய அணி அற்புதமாக விளையாடவேண்டும். அருமையான இன்னுமொரு போட்டித் தொடர் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ளது. எனவே, இந்திய அணியின் பாகிஸ்தான் சுற்றுப்பயணத்தின்போது, மீண்டும் சந்திப்போம் அதுவரை விடைபெறும் நான் என்றென்றும் அன்புடன் -

~ மாயவன் ~

# இந்தியா இனித் தப்பமுடியாது



சச்சின் - நிச்சயம் வருவோம்

காஷ்மீர் பிரச்சினை தொடர்பில் எமது அரசியல் நிலைப்பாடு உறுதியானது. அது வேறுவிடயம். ஆனால், இந்திய அணி பாகிஸ்தான் வருவதை நாங்கள் வரவேற்கிறோம் என்கிறார்கள் பாகிஸ்தானின் முதன்மையான இஸ்லாமிய அரசியல் கட்சிகள். பிரதானமான மத அடிப்படைவாதக் கட்சியான ஜமாத் ஈ இஸ்லாமி கட்சி கருத்துக் கூறும்போது - இரண்டு நாடுகளும் விளையாட்டுத்துறைத் தொடர்புகளை, குறிப்பாக கிரிக்கெட் தொடர்பை ஏற்படுத்துவதில், நாங்கள் எந்தத் தவறையும் காணவில்லை. எந்தவகையில் இந்திய நாடாளுமன்ற அங்கத்தவர்கள் மற்றும் சமூக நல் அமைப்புக்கள் பாகிஸ்தானில் வரவேற்கப்படுகின்றார்களோ, அதே போல இந்திய அணியும் வரவேற்கப்படும் என்கிறார், கட்சியின் குரல்தரவல்ல அதிகாரி ஜனாப் சார்பிராஸ் நவாஸ். அரசியலையும் விளையாட்டையும் வேறுவேறாகவே



அக்தார் - ரொம்ப எதிர்பார்க்கிறேன்

வைத்துக்கொள்வோம் என்கிறார் அவர்.

ஜமாய்த் உலமா ஈ இஸ்லாம் அமைப்பின் அதிகாரி ஜனாப் குவாரி உஸ்மான் கருத்துக் கூறும்போது - நான் கிரிக்கெட் அறிந்தவனும் அல்ல விளையாடுபவனும் அல்ல.

இது எனது அமைப்பின் அநேக அங்கத்தவருக்கும் பொருந்தும். ஆனால், இரு நாடுகளுக்கும் இடையில் சமாதானம் வருவதாக இருந்தால் அது ஏன் கிரிக்கெட்டின் ஊடாக இருக்கக்கூடாது என்று கேட்கிறார்.

இதற்கும் மேலாக ஆறு கட்சிகள் இணைந்த முத்தாஹிடா மஜ்லிஸ் ஈ அமல் (வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் ஆட்சி செய்பவர்கள்) தமது பிரதேசத்தில் உள்ள பெஷாவர் நகரில் ஆட்டத்தை நடத்தாமல் விட்டுவிடக் கூடாது என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபையைக் கேட்டுள்ளது.

ஜனாப் உஸ்மான் கருத்துக்கூறும் போது - தமது பிராந்திய மக்கள் டெஸ்ட் ஆட்டம் பார்க்கும் சந்தர்ப்பத்தை இழக்கச் செய்து ஏமாற்றிவிடக்கூடாது என்கிறார்.

எதிர்வரும் நாட்களில் இந்திய கிரிக்கெட் அணி, பாகிஸ்தான்சென்று, மூன்று டெஸ்ட் மற்றும் ஐந்து ஒருநாள் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ளன. வெற்றிகரமாக இது நடைபெறுமாயின் பதினைந்து வருடத்துக்குப்பின் நடைபெறும் மிக மகிழ்ச்சியான விடயமாக இது இருக்கும்.

காவேரி கிருஷ்ணா.

# இவர் வைரமா? வைரேயமா?

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் பாரிய பாய்ச்சலுக்குக் காரணமாக அமைந்தவர் யாரென்றால், அது அவுஸ்ரேலிய அணியின் பயிற்றுநர் ஜோண் புக்கானன் தான் என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள்.

1953 ஆம் ஆண்டில் பிறந்த இவர் - சிறந்ததொரு கிரிக்கெட் வீரர்தான். ஆனால், சர்வதேச அளவில் சொல்லாமல் பயிற்றுநராகத் தன்னை மாற்றிக்கொண்டவர். இவர் அவுஸ்ரேலிய அணியின் பயிற்றுநராக நியமிக்கப்பட்டபோது - பொப்சிம்ப்ஸன், ஜெப் மார்ஷ் ஆகிய விற்பன்னர்கள் வகித்த அந்தப் பதவியை, இவர் எவ்வாறு கையாளப்போகிறார் என்ற கேள்வி எழுந்தது. ஒரு சந்தர்ப்பத்தில் அவுஸ்ரேலிய அணி பங்குகொண்ட ஆட்டங்கள் 15, வென்றதும் 15 என்றவாறு முடிவுகள் அமைய, அதுவே சரியான பதிலாக அமைந்துவிட்டது.

இவருக்குக் கிரிக்கெட் பயிற்றுநர் பதவிக்கு அப்பால் பல்வேறு விளையாட்டுத்துறைப் பணிகளும் உண்டு.

பன்னிரெண்டாவது கொமன்வெல்த் தடகளப் போட்டிகளின் இணைப்பாளர்களாகப் பணியாற்றியவர்களில் இவரும் ஒருவர். அவுஸ்ரேலிய கரபந்தாட்ட சம்மேளனத்தின் தேசியப் பணிப்பாளர் மற்றும் சுற்றுலாத்துறையிலும் உயர் பதவிகள் வகிப்பவர் அல்லாமலும், கன்பெரா பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளரும் ஆவார்.

தற்போது இலங்கை வந்திருக்கும் இவரைப் பத்திரிகையாளர்கள் சந்தித்தனர். இந்தச் சுற்றுப்பயணத்தைச் சாதகமாகவே ஆரம்பித்திருக்கிறோம். பொன்ரிஸ் அணித் தலைவராக முதன்முறையாக இலங்கை வருகிறார். நானும் முழுமையான தொடர் என்றவகையில் முதன்முறையாகவே வந்திருக்கின்றேன்.

உபகண்டம் எங்களுக்குப் புதியதல்ல. அண்மையில் இந்தியாவில் விளையாடியபோது, இந்தப் பிராந்தியத் தன்மைகளுக்கு நன்கு பழகிக்கொண்டோம் என்பவர், சுழல் பந்துவீச்சை இவர்கள் கூடுதலாக எமக்கெதிரான ஆயுதமாகப் பயன்படுத்த முயற்சிப்பது எமக்குத் தெரியும். நாங்கள் அதற்குத் தயாராகவே வந்திருக்கிறோம் என்கிறார்.

கிளென் மக்ரா பற்றிக் கேட்டபோது - அவர் ஸ்ரீவ்வோவின் தரத்தில் வைத்துக் கணிக்கப்படவேண்டியவர். அவரது தரத்தில் யாரும் விளையாடுவது கடினமானதாகும். ஆனால், இங்கு வந்துள்ள பந்துவீச்சாளர்கள், தேவைப்படும் தகைமைகளைக் கொண்டவர்களாகவே இருக்கின்றனர் என்கிறார். அவர் குறிப்பிடும் பந்துவீச்சாளர்கள் - ஜேஸன் ஜிலெஸ்பி, பிரெட்லீ, அண்டி பிக்கல், பிராட் வில்லியம்ஸ் மற்றும் மைக்கல் காஸ்பரோஷச்

சுழல் பந்துவீச்சைப் பற்றிக் குறிப்பிடும்போது - ஷேன் வோண் வருவது தடைப்பட்டுள்ளது பெரிய இழப்பாகும் என்கிறார். (பிராந்திய செய்தி ஷேன்வோண் டெஸ்ட் தொடருக்காக இலங்கை வருகின்றார்) இன்றைக்கு ஷேன்வோணும், முரளிதரனும் சர்வதேசரீதியில் ஏனைய சுழற்பந்துவீச்சாளர்களைவிட எவ்வளவோ முன்னணியில் இருப்பவர்கள் என்று மனமாரப் பாராட்டுகிறார்.

இலங்கைப் பந்துவீச்சை எதிர்கொள்வது பற்றிக்கேட்டபோது - முரளி எமக்கெதிராகப் பந்துவீசவரும்போதுதான், அவரை நன்கு அவதானிக்கவேண்டும். முரளி மட்டுமல்ல, இலங்கையில் இன்னும் சில பந்துவீச்சாளர்களை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இவர்களுக்கு உரியமுறையில் மைதானத்தில் பதில்கொடுப்பது முக்கியமானது என்கிறார்.

அவுஸ்ரேலியர்கள் மைதான வார்த்தையாடல் தொடர்பில் மிகவும் விமர்சிக்கப்படுகிறார்களே என்றபோது, ஆக்ரோஷமான ஆட்டத்தின்போது, நாம் எப்போதும் நிதானமாகவே விளையாட முயற்சிப்போம். எனக்கும் வார்த்தையாடல் தொடர்பில் உடன்பாடு கிடையாதுதான். ஆனால், சிலவேளைகளில் அப்படி நடந்துவிடுவதும் உண்டுதான் என்கிறர் பட்டும் படாமலும்.



ஜோன் புக்காணன் - உங்கள் புகழ் பெரிது

இறுதியாக முடிக்கும்போது - இலங்கையை நாம் விரும்புகிறோம். இந்தத் தொடரை நல்லதொரு போட்டித் தொடராக மாற்றவேண்டும் என்பதே எம் எண்ணம். அதிலும், இந்தத் தொடரில் வெற்றிபெறவேண்டும் என்பதே அதிமுக்கியமான விடயம் என்றும் கூறுகிறார்.

இவர் ஒரு வித்தியாசமான மனிதர். அணி வீரர்களுடன் தத்துவஞானிகள் பற்றி எடுத்துரைப்பார். விஞ்ஞானம் பேசுவார். மேலாக கவிதை பாடிக் கவியரங்கமே நடத்துவார். அவுஸ்ரேலிய அணி வீரர்கள் கொடுத்துவைத்தவர்கள். அவர்களுக்கு வாய்த்திருக்கும் வாத்தியார் சகலகலா வல்லவன். எல்லோருக்கும் அப்படி வாய்க்குமா?

**நிர்மலன்**

# ஐக்கலிஸ் VS மே.இந்தியத்தீவுகள்



லாறா
வசந்தம் வரும்

**மே**ற்கிந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான முதல் ஒரு நாள் போட்டியில், மேற்கிந்தியத் தீவுகள் அணி ஒரு நாள் போட்டியொன்றில் ஆககுறைந்த ஓட்ட எணணிக்கையான 54 ஓட்டங்களை பெற்றுள்ளது. தென்னாபிரிக்க அணி 208 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இரண்டாவது போட்டியில் எதிரணியை எப்படியும் மடக்கிவிட வேண்டும் என்று எண்ணியவர்களாய் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி பாவம். அவர்களால் இந்தப் போட்டியிலும் வெற்றி பெறமுடியவில்லை. எதிரணிக் காற்று அவர்களை அண்டவே விடவில்லை.

தென்னாபிரிக்கா 179 ஓட்டங்களைப் பெற்றபோது, மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றி பெறப்போகிறது என்ற மேற்கிந்திய ரசிகர்கள் எண்ணத்தை க்னவாக்கினார் பொலக். மேற்கிந்தியத்தீவின் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றி 163 ஓட்டங்களுக்குள் சுருட்டினார்.

மூன்றாவது போட்டியில் மழைவந்து குறுக்கிட்டது. மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலல்ல் துடுப்பெடுத்தாடச் சந்தர்ப்பம் கிடைத்தது. ஆட்டம் 40 ஓவர்களாக குறைக்கப்பட்டது. குறைந்த ஓட்ட எண்ணிக்கையில் மேற்கிநதியத்தீவுகள் அணியின் ஆட்டம் நிறைவுபெற்று, தென்னாபிரிக்கா ஒரு விக்கெட் இழந்த நிலையில் மழை மீண்டும் குறிக்கிட்டது.

ஆட்டம் நிறுத்தப்பட்டபோது, தென்னாபிரிக்காவிற்கு வெற்றிபெறும் வாய்ப்பு இருப்பதாக விமர்சகர்கள்கருதினர். ஆயினும், மேற்கிந்திய ரசிகர்கள் கிரிக்கெட் ஆட்டத்தின் வெற்றி தோல்விகளின் நிர்ணயமின்மையை எடுத்துக்கூறி சமாளித்துக்கொண்டனர்.

நான்காவது போட்டி - யாரும் எதிர்பாராத அளவில் மிக அற்புதமான ஒரு போட்டியாக அமைந்தது.



கலிஸ்
புது வசந்தம்

தென்னாபிரிக்க அணி 297 ஓட்டங்களைப் பெற்றதும், மேற்கிந்தியத்தீவுகள் அணி தோற்றுவிடும் என்றே கருதினர். ஆனால், மூன்று விக்கெட்டுக்களை இழந்து 300 ரன்களைப் பெற்று இந்தப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியில் சந்தர்போல், சர்வான், லாரா ஆகியோரின் அபார அதிரடி ஆட்டம், மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வெற்றிப் பாதையைச் சீர்ப்படுத்தின.

ஐந்தாவது போட்டியும் மிகவும் சிறப்பாகவே மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு அமைந்தது. இந்தப் போட்டியில், மேற்கிந்தியத்தீவுகள் அணி 304 ஓட்டங்களை, கைல் (153) பவல் 24 பந்துகளில் 49 ஓட்டங்களைக் குவித்ததன்மூலம் பெற்றுக்கொண்டது.

வெற்றி வாய்ப்பு மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு அதிகம் இருந்தது. இறுதி ஓவரில் பொலக்கின் அற்புதமான ஆட்டத்தால், தென்னாபிரிக்கா 6 விக்கெட்டுக்களை இழந்து, 310 ஓட்டங்களைப்பெற்று தொடரைக்கைப்பற்றியது.

தென்னாபிரிக்க அணியின் ஓட்டமெடுக்கும் மிசின் கலிஸ் இந்தப் போட்டியிலும் 139 ஓட்டங்களைப்பெற்றார். அவரின் பங்களிப்பு டெஸ்ட் போட்டியில் மட்டுமன்றி ஒருநாள் போட்டியிலும் தொடர்ந்ததைக் காணமுடிந்தது. **- வெண்மதி -**

# நம்பிக்கை வேண்டும்தான்

**அ**வுஸ்ரேலிய அணி தொடர்பில் கருத்துக்கூறும்போது, இருவரின் கருத்துக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. ஒன்று ஒருநாள் அணித்தலைவர் மாவன் அத்தப்பத்துவின் கருத்துக்கள், மற்றது டெஸ்ட் அணித்தலைவர் ஹசான் திலகரட்ணவின் கருத்துக்கள்.

ஹசான் திலகரட்ணவின் கருத்துக்கள் கூட்டமாகவே வெளிவருகின்றன. அவர் அவுஸ்ரேலியர்களின் மைதான வார்த்தையாடல்களுக்கு அஞ்சப்போவதில்லை என்றே தெரிகிறது. நாங்கள் குழந்தைகள் அல்ல. இவர்கள் சொல்வதையெல்லாம் கேட்டுக்கொண்டிருக்க.



அத்தபத்து

அவர்களின் வார்த்தையாடல்களுக்குச் சமதையாக எங்களாலும் வார்த்தையாட முடியும். ஆனால், ஆட்டத்தின் உக்கிரம் கருதி நடைபெறும் அவற்றை, மைதானத்திலேயே வைத்துக் கொள்வோம் மேலிடத்துக்கு கோள் மூட்டவேண்டாம் என்றவாறு செல்கிறது அவரது கருத்து.

மறுபுறம் மாவன் அத்தப்பத்து - ஐந்து நட்சத்திர ஹொட்டலில் இவரது அறையில் இருந்து 30,000 அமெரிக்க டொலர்கள் கைப்பற்றப் பட்ட விடயத்தில், இவர் கொஞ்சம் ஆடித்தான் போய்விட்டார். ஆனால், அவருக்கும் அந்தப் பணத்துக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்பது வெளிடைமலை. இப்போது தனது கவலை அந்த விடயத்தைப் பற்றியதல்ல, எனது கவலையெல்லாம் ரிக்கிபொண்டிங்கின் அணியை எதிர்கொள்வதேயாகும். என்றாலும், இங்கிலாந்துடனான ஒரு நாள் போட்டித் தொடர்-மழை நீரில் உப்புச் சப்பற்றுக் கழுவப்பட்டு போக, சரியான போட்டிகள் தங்களுக்குக் கிடைக்கவில்லை என்பது இவரின் ஆதங்கம். நேற்றுவரை நான்கு நாள் போட்டிகள் தம்மையெல்லாம் ஆக்கிரமித்திருந்தால் சரியான ஒருநாள் பயற்சிகளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போய்விட்டது என்றும் அவர் கூறுகிறார்.



ஹசான்

இருந்தாலும், அவுஸ்ரேலிய அணியே உலகின் சிறந்த அணியென ஏற்றுக்கொள்கிறார். அவர்கள் எங்கள் மண்ணிற்கு புதியவர்கள் என்பதும், காலநிலை, மைதானநிலை என்பவை தமக்குச் சாதகமாக் அமையும் என்ப்து அத்தப்பத்துவின் நம்பிக்கை.

என்னவென்றாலும் சிங்கத்தின் குகையில் புகுந்து கங்காரு அடிக்கும் என்றே எங்கேயோ இருந்து ஒரு குரல்கேடகிறது.

**-காயத்ரி-**



ரிக்கிபொண்டிங்
இலங்கையில் புயல்

# அதிரடித் தொடக்கம்

பாரம்பரியக் கலைகளில், கட்டியங் கூறுபவர் என்று ஒருவர் வருவதுண்டு. அதோடு அந்த நிகழ்வும் ஆரவாரமாகத் தொடங்கப்பட்டுவிடும். இதைப் போலவே அவுஸ்ரேலிய அணியினர் தமது இலங்கைக்கான முதலாவது உத்தியோகபூர்வ போட்டிக்கு முன்னதாக, இலங்கைக் கிரிக்கெட் பிரசிடென்ஸ்ட்ஸ் XI அணியுடனான போட்டியில் அழகாகக் கட்டியங்கூறியுள்ளார்கள். இலங்கை XI அணியின் விளையாடியவர்கள் எல்லாம் பிரபலங்களே. அதோடு சர்வதேச அறிமுகம் பெற்றவர்களும் ஆவர். உதாரணம் ஆர்னல்ட், அவிஷக் குணவர்த்தன, ஜெஹான் முபராக், சமரசில்வா என்று பட்டியல் நீள்கிறது. மறுபுறம் அவுஸ்ரேலிய முழுமையான அணி விளையாடியிருகக கிறது. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை XI அணி 50 ஓவர்களில் பெற்றது 8 விக்கெட் இழப்பிற்கு 283 ஓட்டங்கள். அதுகெளரவமான எண்ணிக்கை. ஆனால், அதன்பின்தான் இலங்கை XI க்கு அவலம் தொடங்கியது. ஆரம்பத் துடுப்பாட்டக்காரர்களாக வந்த கில்கிறிஸ்டும், ஹேய்டனும் 43 மற்றும் 35 என்று பெற, முதல் 70 ஓட்டங்கள் வந்தது 45 பந்துகளில். தொடர்ந்து வந்த ரிக்கிபொண்டிங் 57, டேமியன் மார்ட்டின் 42, அன்ரூ சைமன்ஸ் 47 என்று சேகரித்துக் கொடுத்துவிட்டது காணுமென்று அவுட்டாகாமலே பவிலியன் திரும்ப, பின்வந்த கிளார்க், கட்டிச் இருவரும் வெற்றி இலக்கைத்தாண்டி நின்றார்கள். 44 ஓவர்கள், இதில் ஆறுகளும், நான்குகளும் அநேகம். சிறப்பம்சம் அன்ரூ சைமன்ஸின் ஒரு ஆறு, பத்திரிகையாளரின் முகப்புக் கண்ணாடியைச் சிதறடித்ததுதான். அருமையான துடுப்பாட்டப் பயிற்சி அவுஸ்ரேலியாவிற்கு.

**- செந்தூர் -**

சாரணீயத் தந்தையின் 147 ஆவது பிறந்தநாள் நினைவாக... - இ. தில்லைவாசன் -

# சகல கலைகளிலும் தேர்ச்சி பெற்றிட சாரணியப் பயிற்சி வழிவகுக்கும்

**சாரணியத்தின் தந்தை பேடன் பவல் பிரபுவின் 147 ஆவது பிறந்தநாள் இன்றாகும். அவரின் பிறந்தநாளை முன்னிட்டு சாரணியப் பாடத் திட்டத்தினை அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.**



THIS BELONGS TO A SCOUT

சாரணியத்தை உலகுக்குத் தந்த தந்தை ரோபேட் ஸ்ரீபன் சிமித் பேடன் பவல் பிரபு. அவரை உலக சாரணர்கள் எல்லோரும் இந்த நாளிலே விழா எடுத்துக்கொண்டாடுகிறார்கள். இவர் 22.02.1857 ஆம் ஆண்டு பிறந்தார்.

1907 ஆம் ஆண்டு சாரணியத் தந்தையால் இங்கிலாந்திலே பிரவுன் ஸீ தீவில் இருபது சாரணர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சாரணியம், இன்று உலகெங்கும் பலகோடி சாரணர்களுடன் வீறுநடைபோடுகின்றது. இவ்வாறு சாரணியம் வளர்ந்து வருவதற்குக் காரணம்- சாரணியத் தந்தையின் அடிப்படைக் கொள்கைகளான - சமயப்பற்று, நாட்டுப் பற்று, உலக சகோதரத்துவம், பிறருக்கு உதவுதல், வெட்டவெளியான பாசறை வாசம், வாக்குறுதி, விதிகளுக்கு அமைவாக நடத்தலேயாகும். இந்த அடிப்படைக் கொள்கைகள்மூலம் சிறார்களின் உள்ளத்தையும், உடலையும், செயலையும் தூய்மைப்படுத்தி திடமாக்கிச் சகலகலைகளிலும் தேர்ச்சி பெற்று, எதற்கும் தயாரான சாரணனாக வாழ வழியமைத்துள்ளார்.



மேலும் சிறப்பு அம்சமாக ஆரம்பக்கல்வி கற்கும் காலத்திலேயே, அதாவது ஏழு வயதில குருளைச் சாரணர்களாகச் சேர்ந்து சாரணியக் கல்வியையும், அதன் பாடத்திட்டத்துக்கு அமைவாகக் கற்று ஒழுங்கு முறையாகச் சித்தியடைகின்றார்கள். இந்தச் சாரணியப் பாடத்திட்டத்தை எல்லாமக்களும் சாரணியத் தந்தையின் 147 ஆவது பிறந்த தினத்தில் அறிந்திருப்பது மிகமிக அவசியமாகும்.

**சாரணியக் கல்விமுறையின் பாடத் திட்டம்**

ஏழு வயதில் குருளைச் சாரணராகச் சேருதல்.

**குருளைச் சாரணனின் அங்கத்துவச் சின்னத்துக்கான பாடம்.**

குருளைச் சாரணர் வாக்குறுதி, விதிகள், மகுடவாக்கியம், கம்பீரத் தொனி, வணக்கம், இடக்கை குலுக்குதல், வனக் கதைகள், துடிநிலையும் நல்லொழுக்கமும், தான் செய்த ஓர் நற்பணி குறித்து ஆக்கேலாவுக்குக் கூறுதல். இந்தப் பாடத்தை ஒன்றரை மாத சேவைக்காலத்தில் பயின்று சித்தியடைந்து ஆக்கேலாவால் உறுதிப்படுத்தப்பட்டதும், சின்னம் சூட்டும் விழாவில்- உலக சாரணிய சின்னமும், .குருளைச் சாரணர் அங்கத்துவ சின்னமும் சூட்டப்பட்டு, உலக குருளைச் சாரண சகோதரர்களில் ஒருவராக அங்கத்துவம் பெறுவர்.

**வெங்கல தாரகைக்கான பாடம்**

குருளைச் சாரணன் வாக்குறுதி, விதிகளுக்கு அமைவாக நடக்கின்றார் என ஆக்கேலாவால் உறுதிப்படுத் துதல், சமய நிகழ்வுகளில் பங்குபற்றுதல், பிறருக்கு உதவுதல், நேர்கட்டு, துணிக்கட்டு, நுனி குலையா வரிச்சு, நேரம் பார்த்தல், சட்டை, காற்சட்டை பட்டின் தைத்தல், தேநீர் தயாரித்தல், அரிக்கன்லாம்பு துப்புரவுசெய்து ஏற்றுதல், திசையறிகருவியில் நான்கு திசை பார்த்தல், கழுத்துப்பட்டி பாதுகாப்பு, குருளைச் சாரணர் நிகழ்ச்சிகளில் பங்கேற்றல், தேசிய கீதம், தேசியக்கொடி, வீடு, பாடசாலை சுற்றாடலைத் துப்பரவாக வைத்திருத்தல், அறுவர் அல்லது குழுவுக்குச் சரித்திரக் கதைகள் கூறுதல், பத்து மீற்றர் தூரம் பந்து எறிதல், பிடித்தல், ஒரு கிலோ பாரத்தைத் தலையில் வைத்து பதினைந்து மீற்றர் நடத்தல், முன், பின் கயிறுபத்தைந்து தரம் அடித்தல், குத்துக்கரணம் போடுதல் ஐந்துதரம் உருளுதல், தவளைப் பாய்ச்சல், தீய பழக்கவழக்கங்களினால் உடலில் ஏற்படும் தீமைகள்பற்றி ஆக்கேலாவுக்குக் கூறுதல், பாடசாலையிலிருந்து வீட்டுக்குப் போகும் பாதையை விபரித்தல்.

வீதி ஒழுங்குவிதி, ஐந்து அல்லது இரு நண்பர்களை வீட்டுக்கு அழைத்து உபசரித்து, சேவைகள் செய்து உணவு பரிமாறுதல். தகுதிகாண் சின்னங்கள் இரண்டு சித்தியடைதல், சின்னம் சூட்டப்பட்டு ஆறு மாத கால சேவை, இந்தப் பாடத்தை எட்டு வயது வரும்வரை பயின்று சித்தியடைந்ததும், ஆக்கேலாவால் உறுதிப்படுத்தப்பட்டது வெங்கலதாரகை வழங்கப்படும்.

**வெள்ளித் தாரகைக்கான பாடம்**

உண்டியலில் பணம் சேமிப்பு, சமய நிகழ்வில் பங்கேற்றல், சீருடை, புத்தகங்களைப் பாதுகாத்தல், மூத்தோருக்கு மரியாதை செய்தல், திருவிழாக்கள், பிறந்த தினவிழாக்களில் பங்கேற்றல் ஒருவளையமும் இரு ஒற்றைக்குழச்சமும், முளைத்தும்புக் குழைச்சு, திசையறிகருவியில் எட்டு திசைபார்த்தல், சிறிய கத்திப் பாவனை, குக்கர் பாவனையும் அதனால் ஏற்படும் விபத்துக்களும், மேல்சட்டை, கால்சட்டை தோய்த்து உலர்த்தி மடித்தல், நடை, துவிச்சக்கரவண்டி பிரயாணம் செய்து விபரம் கூறுதல். வீட்டில் வளர்க்காத பறவைகள், மரங்கள், மீன்கள், பூச்சிகளை அவதானித்து வாழ்க்கை முறைகளைப் பதிவுசெய்தல், பெரிய மகான்களின் கதைகளை அறுவருக்கு கூறுதல், கொடி கட்டி பறக்கவிடுதல், தனது உயரத்துக்குப பாய்தல், ஐம்பது மீற்றர் அணிநடை, நீந்துதல், துவிச்சக்கரவண்டி ஓடுதல், பாதையைக்கடத்தல், முதலுதவி, சிறுவருக்குதவுதல், நண்பர்களுடன் கிராமம், நகரங்களுக்குச் சென்று விபரங்களை ஆக்கேலாவுக்கு விபரித்தல், வெங்கல தாரகை பெற்றபின் ஆறுமாத கால சேவை, வீட்டுப்பணியாளன், தோட்டக்காரன் சின்னமும் மேலும் மூன்று தகுதிகாண் சின்னமும் சித்தியடைதல் வேண்டும். இப்பாடத்தில் சித்திபெற்றுள்ளார் என ஆக்கேலாவால் உறுதிப்படுத்தப்பட்டதும் வெள்ளித்தாரகை வழங்கப்படும்.

**தங்கத் தாரகைக்கான பாடம்**

சமயக்கதைகள் அறுவருக்கு, குழுவுக்கு கூறுதல், இலைகள், பூக்கள், இறக்கைகள், பத்திரிகைச் செய்திகள், மகசீன் செய்திகளை கொப்பியில் ஒட்டி விபரம் எழுதுதல் சேமிப்புக்கணக்கு ஆரம்பித்தல், அறுவருக்கு அல்லது குழுவுக்குக் கம்பீரத் தொனி கற்பித்தல், சுருக்குகுழைச்சு, வளையக்கட்டு, திசையறிகருவிகொண்டு சிறு தூரம் செல்லுதல், இயற்கைப் பொருட்களைக் கொண்டு தீமூட்டி உணவு தயாரித்தல், காற்சட்டை, சேட் அயன் செய்தல், ஞாபகசக்தியை வளர்க்கக்கூடிய மூன்று விளையாட்டுகள், குழுவுடன் விடுமுறையை கழித்தல், இருநூறு மீற்றர் தூரம் அம்புக் குறியீடுகளைப் பின்பற்றிச் செல்லுதல், பாடல்கள், தாய்மொழி, பிறமொழி மூன்று நிமிடப் பேச்சு, நகைச்சுவை, நடனம் வாத்தியங்கள் இசைத்தல், விநோத உடை, நூறு சொற்கதை அறுவருக்கு கூறுதல், வானொலி, தொலைக்காட்சி விளம்பரங்களை ஆராய்தல், மரம் ஏறுதல், கயிற்றில் நான்கு மீற்றர் செல்லுதல், முதலுதவி பெட்டி பயன்படுத்துதல், நண்பர்களுடன் தொழில் நிறுவனங்களுக்குச் செல்லுதல், ஓடி அல்லது துவிச்சக்கர வண்டியில் சென்று பதினைந்து சொல் செய்தியை கூறுதல், பிற குருளைச் சாரணர் கூட்டங்களுக்குச் செல்லுதல், பிறருக்கு உதவுதல் - வெள்ளித்தாரகை பெற்றபின் ஆறு மாதகால சேவை, மகிழ்ச்சிகரமான குடும்பம், முதலுதவியாளன், வழிகாட்டி சின்னங்களும், மேலும் தகுதிகாண் சின்னங்கள் மூன்றும் பெறுதல், இந்தப் பாடத்தை ஒன்பதரை வயது வரை கற்று சித்தியடைந்ததும் ஆக்கேலாவால் உறுதிப்படுத்தப்பட்டதும் தங்கத் தாரகை வழங்கப்படும். குருளையருக்கு இருபத்தொரு தகுதிகாண் சின்னங்கள் உண்டு. இவற்றையும் பெறுதல் நன்று.

**குருளைச்சாரணன், சாரணனாக இணையும் விருதுக்கான பாடம்**

சாரணர்களுக்கான வாக்குறுதி, விதிகள், சைகைகள் வணக்கச் சைகை, மகுட வாக்கியம், சாரணியத்தந்தையின் வரலாறு, உலகசாரணியம், இலங்கை சாரணியம், துருப்பு செயற்பாடு, கை, ஊது குழல் சமிக்ஞைகள், கட்டுக்களை பயன்படுத்துதல், சாரண குழுவுடன் வெட்டவெளி பயணம், குருளைச்சாரணர் குழுவிலிருந்து சாரணர் துருப்புடன் இணையும் "மேலே செல்லும் வைபவம்" நடைபெறும், தேசிய கொடி, கீதம், உடற்சுத்தம், சரியான உடல் நிலைகள், சுகாதாரம், இலகுவாய்நில், நிமிர்ந்துநில், இடம், வலம், பின்திரும்புதல், வீட்டை சுற்றி ஒரு கிலோமீற்றர் தூர விபரம்- இந்தப் பாடத்தை 11 வயதுவரை கற்று சித்தியடைந்ததும் சாரண சின்னம் வழங் கப்பட்டு உயர்வுபெறுவர்.

**சாரணர் விருதுக்கான பாடம்**

சாரணர் வாக்குறுதி, விதிகளுக்கு அமைவாக வாழ்ந்து காட்டுதல், சேமிப்பு, சுயகுறிப்புப் புத்தகம் பேணுதல், கலை நிகழ்வுகள், சாரணர் பாசறைவாசங்கள், பாசறைத் தீ வைபவங்கள், பொருட்காட்சி என்பவற்றில் பங்கேற்றல். கல்வி சம்பந்தமான கலாசார, சரித்திரப்புகழ்பெற்ற இடங்களுக்குச் செல்லுதல், இருநூறு சொல் கட்டுரை, செம்படவன் முடிச்சு, மரமுடிச்சு, பண்டியிழுப்பான் முடிச்சு, படகோட்டிகளின் குலைவுத்தடை வரிச்சு, சதுரக்கட்டு, மூலைவிட்ட கட்டு, கத்தரிக்கட்டு, தாங்கும் மரச்சட்ட அமைப்பு நகர்த்தக்கூடிய கொடிக்கம்பம் ஆகியவற்றின் பயன்கள், கொடி மடித்தல், பறக்கவிடுதல், கைக்கோடாரி, மரந்தறிக்கும் முறைகள், வனவியற் குறியீடுகள், திசையறிகருவி, அவதானம், பொதுவான மருத்துவ பயன்தரும், பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த மரங்களின் அறிவு, பேடன் பவல் பிரபுவின் ஆறு ஆரோக்கியமான தேக அப்பியாசங்கள், அணியுடன் நூறு மீற்றர் அணிநடை. சமூக சுகநல பழக்கவழக்கங்கள் அவசர தேவைகளில் உதவுதல், அவசர செய்தி கூறுதல், தொலைபேசி, நகரம், கிராமங்கள் பற்றிய பூரண அறிவு, அணியுடன் அல்லது துருப்புடன் ஒரு இரவு பாசறைவாசம், இயற்கை பொருட்களைக்கொண்டு தீ மூட்டி வெட்ட வெளிச்சமையல், பன்னிரண்டு கிலோமீற்றர் நடை பிரயாணம் - ஆறு மாதகால சேவை, தகுதிகாண் சின்னங்கள் ஆறு பெறுதல். இந்தப் பாடத்தை பன்னிரண்டு வயதுவரை கற்று சித்தியடைந்ததும் சாரணர் விருது வழங்கப்படும்.

**மாவட்ட ஆணையாளர் நாடா பாடத் திட்டம்**

தொடர் சேமிப்பு, சுயகுறிப்பு, அணிக் குறிப்புப் புத்தகம்பேணல், பொழுது போக்கு செயல்களில் மூன்று மாதம் செயற்படுதல், தீயணைப்போன் நாற்காலி முடிச்சு, உருளும் முடிச்சு, சுருக்குவளையக்கட்டு, இரட்டைத் துணிக்கட்டு, தீ மூட்டும் முறைகள், முன்னோடி செயற்பாடுகள், அடிச்சுவடுகள் பின்பற்றுதல், வரைபடம் வரைதல், மதிப்பீடு செய்தல், கோடரி பாவனை, பத்து பறவைகளின் வாழ்க்கைமுறை, முப்பத்தைந்து மீற்றர் நீந்துதல், துருப்புடன் இருநூறு மீற்றர் அணிநடை, சமூக சுகநல பழக்கவழக்கங்கள், வீதி ஒழுங்குவிதிகள், வீட்டைச் சுற்றிய சூழலின் பூரண அறிவு, இரண்டு இரவு பாசறைவாசம், இருபத்திரண்டு கிலோமீற்றர் நடைப்பிரயாணம் - தகுதி காண் சின்னங்கள் பதினைந்துக்கு மேல், சாரணர் விருது பெற்று ஒன்பது மாதகால சேவைகாலத்தில் பயின்று சித்தியடைந்ததும் மாவட்ட ஆணையாளர் நாடா வழங்கப்படும்.

**பிரதம ஆணையாளர் விருதுக்கான பாடம்**

சாரணர் வாக்குறுதி, விதிகளை கற்பித்தல், சேமிப்பு, சுற்றாடலில் ஏற்படும் தொற்றுநோய்கள் வராது தடுக்கும் முறைகள், சித்திரம், வீரதீர விளையாட்டுகள், துருப்புக்குச் சமைத்தல், கண் தொற்றுகள், முன்னோடி செயற்பாடுகள், கூடாரம் அமைத்தல், சுகாதாரம், நிறை உணவு, சமூக வேலைத்திட்டங்கள், பாசறை உபகரணங்களைப் பாதுகாத்தல், ஏழு இரவு பாசறை வாசம் - தகுதிகாண் சின்னங்கள் நான்குக்கு மேல், வினைத்திறன் அலங்காரம். இந்தப் பாடத்தை பதினைந்து வயதுவரை கற்று சித்தியடைதல் வேண்டும். மாவட்ட ஆணையாளர் நாடாபெற்று பின் 6 மாதகால சேவை.

**ஜனாதிபதி சாரணர் விருதுக்கான பாடம்**

வாக்குறுதி, விதிகளைப் பயன்படுத்தி விளையாட்டுக்கள், சுயகுறிப்புப் புத்தகம் பேணல், சித்திரம், சாரணர் கைத்திறன்கள், முன்னோடி செயற்பாடுகள், உடனடி முதலுதவி, சுகாதார சுகநல பழக்கவழக்கங்கள், முன்கூட்டியே திட்டமிட்டு நிகழ்ச்சிநிரல் போடுதல், எழுபத்திரண்டு மணித்தியால சமூக சேவை செய்தல், துணிகர செயல்கள்- தகுதிகாண் சின்னங்கள் மகிழ்ச்சிகரமான குடும்பம், முதலுதவியாளன் உட்பட ஆறு சின்னத்துக்கு மேல் பிரதம ஆணையாளர் விருதுபெற்று, ஆறுமாதகால சேவை. இந்தப் பாடத்தை பதினெட்டு வயதுக்கு முன் சித்தியடைந்து ஜனாதிபதி விருதைப்பெறவேண்டும். பதினெட்டு வயதுக்கு ஒருநாள் கூடினாலும் ஜனாதிபதி விருதுபெறமுடியாது. சாரணர்களுக்கு நூற்றுப்பதின்நான்கு தகுதிகாண் சின்னங்கள் உண்டு. அவற்றையும் பெறுதல் நன்று.

தொடர்ந்து திரிசாரணனாகி இருபத்து நான்கு வயதுவரை திரிசாரணர் பாடத்தை பயின்று, சித்திபெற்று "பேடன் பவல்" விருதைப்பெறுதல் வேண்டும். அடுத்து சாரணர் தலைவர்களுக்கான பயிற்சி அவத்தை ஒன்று முதல் ஐந்து வரையும் பங்குபற்றி, நான்கு ஒப்படைகள் செய்துமுடித்து சித்தியடைந்ததும் - "சாரணர் தருசின்னம்" வழங்கப்படும். பின்னர் உதவித் தலைவர் பயிற்றுநர் பயிற்சியில் பங்குபற்றி சித்தியடைந்ததும், உதவித் தலைவர் பயிற்றுநர் பட்டம் வழங்கப்படும். சாரணியத்தின் அதியுயர் சர்வதேச விருதான தலைவர் பயிற்றுநர் பயிற்சியை வெளிநாடுசென்று பங்குபற்றி சித்தியடைந்ததும் "தலைவர் பயிற்றுநர்" விருது வழங்கப்படும். இந்தச் சாரணியக் கல்வியைக்கற்று, நிறைவுசெய்து சாரணியத் தந்தையின் குறிக்கோளை நிறைவு செய்தல் வேண்டும்.

"சாரணியம் வளர்க சமுதாயம் நிறைவு பெறுக"

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*பேதமை என்பதுஒன்று யாதுஎனின் ஏதம்கொண்டு ஊதியம் போக விடல்.*

திருக்குறள்.

## நமது நோக்கு

### பிக்குமார்களின் அரசியல் பிரவேசம்...

அரச பதவியும், ஆட்சியுரிமையும் வேண்டாமென அர்த்த ராத்திரியில் அரண்மனையைவிட்டு வெளியேறி அரச மரத்தின் கீழ் அமர்ந்து ஆன்ம ஈடேற்றம் காண தவமியற்றி ஞானம் பெற்று, பரிநிர்வாணம் பெற்று முழுமையான துறவியாகி, சித்தார்த்தன் என்ற அரச நாமத்தையும் துறந்து கௌதம புத்தர் என்ற மகாபுருஷனாகி தர்மத்தையும், இரக்கத்தையும், அன்பையும் உலகிற்குப் போதிக்கும் அற்புதமான மார்க்கத்தை உலகிற்கு வழங்கிய புத்தபிரானின் பாதம்பட்ட மண் என்ற பெருமை இந்த இலங்கை மண்ணுக்கு உண்டு.

அது மட்டுமல்ல, இங்கு வாழும் பெரும்பான்மையின மக்கள் தங்களைப் பௌத்த சிங்களவர் என்று கூறிக் கொள்வதில் பெருமை கொண்டவர்களுமாவர். அரச மரம் காணும் இடங்களில் எல்லாம் புத்தர் சிலையை வைத்து வழிபட்டு சிலவேளைகளில் விகாரைகளையும் அமைக்கும் கலாசாரம் அவர்களுடையதாகும்.

'புத்தம் சரணம் கச்சாமி... சங்கம் சரணம் கச்சாமி, தர்மம் சரணம் கச்சாமி' என்று ஓங்கி ஒலித்து புத்தத்தைச் சரணடைகிறேன், சங்கத்தை (பௌத்த சங்கம்) சரணடைகிறேன், தர்மத்தைச் சரணடைகிறேன் எனப் பிரகடனம் செய்யும் காவியுடை- அதாவது 'சீவர ஆடை' தரித்து உபதேசம் செய்யும், பிக்குகளின் வழிநடப்பவர்கள் சிங்கள மக்கள் என்ற அபிப்பிராயத்தை உருவாக்க முயல்பவர்களும் அதேமக்கள்தான்.

ஆனாலும், அவர்களும் அவர்கள் தேர்வு தெரியும் அரசும், சிறுபான்மை மக்களின் உரிமைகளை, அவர்களின் உணர்வுகளை மதித்ததுமில்லை, புரிந்துகொண்டதுமில்லை. சிறுபான்மையோர் விடயத்தில் பெரும்பான்மையோரால் பெரும்பாலானோர்கள், சின்னத்தனமாக நடந்துகொண்ட வரலாற்றின் அத்தியாயங்களில் தமிழ்மக்களின் இரத்தத்தின் வாடை வீசுவதை சரித்திரம் அறிந்தோர் உணர்வர்.

பௌத்த மத பீடாதிபதிகள் என அழைக்கப்படும் மும்மணிகளான மகாநாயக்க தேரோக்களின் ஆசீர்வாதங்களையும், வாழ்த்துக்களையும் பெற்றபின்னர் அரச பீடத்தை அலங்கரித்துவந்த எந்த அரசியல் தலைமைகளும் டி.எஸ். சேனநாயக்க முதல் இன்றுள்ள அதிகார பீடத்தவர் வரை எவருமே சிறுபான்மையினத்தவரை ஒரு பொருட்டாக மதித்ததில்லை. அவர்களுக்கு மனித அங்கீகாரத்தை மனதார வழங்கியதுமில்லை. ஆளும் வர்க்கம் சிங்கள இனம் என்றும் அவர்களின் மதம் பௌத்த மதம் என்றும் அதிகார கர்வத்துடன் அவர்கள் என்று நினைக்கத் தொடங்கினார்களோ, அன்றைக்கே அவர்கள் தொலைத்துவிட்டது பௌத்த தர்மக் கோட்பாடுகளைத்தான்.

அதனால்தான், சிறுபான்மை இனத்தவர்கள் மீது அவர்களால் கருணைகாட்ட முடியவில்லை, அன்பைச் செலுத்த முடியவில்லை.

அதற்கு பொறுப்பேற்க வேண்டியவர்களில் முக்கியமானவர்கள் ளெத்த மதகுருமார்தான் என்பதை உண்மையான பௌத்தர்களாகத் தம்மைக் கருதி அன்பையும், சமாதானத்தையும், அமைதியையும் நாடிநிற்கும் சிங்கள மக்களும் அறிவர்.

ஆட்சிபீடம் ஏறும் எந்த அரச தலைமையிடமும் எந்த மதபீட மகாநாயக்கர்களும், சிறுபான்மை மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு அவர்களுக்கான உரிமைகளை உடனடியாக வழங்கி அவர்களுடன் அன்பாக இருங்கள் எனக்கூறி ஆசீர்வாதம் கொடுத்ததாக வெளிப்படையான செய்திகள் கிடையாது. ஆனால், பகிரங்கமாகவே பச்சை இனவாதம் கக்கிய, இனக்கலவரங்களில் நேரடியாகப் பங்குகொண்ட தமிழ்மக்களுக்கு எதிரான தீவிரமான யுத்தத்தை வலியுறுத்திய விகாரைகளை இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு மையமாக மாற்ற முயன்ற வகுப்புவாத இனவெறி அரசியல் பேசிய பௌத்த பிக்குகளின் கதைகளைக் கூற வேண்டிய அவசியமே கிடையாது.

பிக்குகள் பெரமுன - ஒரு அரசியல் கட்சியையே உருவாக்கி பௌத்த மத கொள்கைகளை அவமதித்த பிக்குகளை சிங்கள மக்களே அறிவர். அரச வாழ்வை வெறுத்த அற்புத ஞானி கௌதம புத்த பகவானின் பெயரை மீண்டும் அரசியலுக்குள் இழுத்து அவரின் அன்பு, சாந்தி, கருணை என்ற தத்துவத்தை அவமதித்தவர்கள் அரசியல்வாதிகளான இந்த நவீன புத்தபிக்குகள்தான். இன்றும் இனவாதம் பேசும் அரசியல் கட்சிகளான ஹெல ஊறுமய போன்றவற்றின் உறுப்பினர்களாகி பூன்றாந்தர அரசியல் பேசி அதிகார பீடத்தில் அமர தேர்தலில் போட்டியிட அணிவகுத்து வரும் பிக்குளைப் பார்க்கும்போதும், அவர்களின் செயல்களை நோக்கும் போதும் இலங்கையில் பௌத்தமதம் அரச மதமாக மட்டுமல்ல, அரசியல் மயமாகி விட்டுள்ளதையும் எவரும் உணரமுடியும்.

மதம் அரசியலைப் பிடித்தாலும் அரசியல்வாதிக்கு மதம் பிடித்தாலும் நாசம் என்னவோ நாட்டுக்குத்தான்.

இன்று யாழ். குடாவில் போட்டியிட நியமனப்பத்திரங்களை தாக்கல்செய்ய வந்த அரசியல்வாதிப் பிக்குகள், புத்தபகவானின் உன்னத கோட்பாடுகளை, தத்துவங்களை உபதேசம் செய்யும் ஞானப்பணியை கைவிட்டு, ஹெல உறுமயவின் இனவாதப் பிரசாரகர்களாகவும் பிச்சா பாத்திரத்தை தூக்கி வீசிவிட்டு 'வாக்குகளை' யாசிக்கும் வரண்ட அரசியல்வாதிகளாகவும் மாறிவிட்டமை பரிதாபத்திற்குரிய விடயமே...

பிகுமார்களால் அரசியல்வாதிகள் புனிதமடையப் போவதில்லை.

அரசியல்வாதிகளால் பிக்குமார்கள் இனவாதிகள் ஆவது மட்டும் உறுதி.

- இது இலங்கையின் எதிர்காலத்திற்கு அச்சமூட்டும் செய்தியேயாகும்.

## நாடும் நடப்பும்

செய்தி: ரத்வத்தை தேர்தலில் போட்டியிட சந்திரிகா தடை....




# எத்தனை கட்சிகள் இணைந்தாலும் ஐக்கிய தேசிய கட்சியே வெற்றிபெறும்

### முன்னாள் அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் - மக்கள் விடுதலை முன்னணி மட்டுமன்றி ஏனைய சகல எதிர்க்கட்சிகளும், கூட்டுச் சேர்ந்தாலும், எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியே வெற்றியீட்டும். ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக எத்தகைய பொய்ப்பிரசாரங்கள், சமாதான சகஜ வாழ்வை எதிர்பார்த்திருந்த பொதுமக்களுக்கு, இந்த நாட்டில் யுத்தம் நீங்கி ஒற்றுமையைத் தோற்றுவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் நோக்கமும், கொள்கைகளும் தெளிவாகத் தெரியும். சிந்திக்கும் ஆற்றல்நிரம்பிய இந்த நாட்டு மக்களை பொய் வதந்திகள்மூலம் எவரும் ஏமாற்ற இயலாது.

இவ்வாறு முன்னாள் புனர்வாழ்வு, மீள்குடியமர்வு அகதிகள் விவகார அலுவல்கள் அமைச்சரும், கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜயலத் ஜயவர்த்தன குறிப்பிட்டார்.

கம்பஹா மாவட்டத்தின் "ஜா எல" ஐ.தே கட்சியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் "ஜா எல" ஐ.தே கட்சி மத்திய கிளை அலுவலகத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்துக்கு தலைமைவகித்து உரையாற்றிய ஜயலத் ஜயவர்த்தன தொடர்ந்து பேசுகையில்-

ஐ.தே முன்னணி அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் இணைந்து, புரிந்துணர்வு உடன்படிக்கையை மேற்கொண்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முற்பட்டது. இனப்பிரச்சினை ஓய்ந்து சமாதான சகவாழ்வு நிலைத்துவிட்டால், இந்த நாட்டு மக்கள் ஐ.தே கட்சியின் அபிமானிகளாக மாறிவிடுவார்கள். ஜனாதிபதி தமக்கு அரசியல் அந்தஸ்துகிட்டாமல் போய்விடும் என்பதால், அரசைக் கலைத்து சமாதான முயற்சிகளைத் தடைசெய்துவிடுவார்.

இந்த நாடு எக்கேடுகெட்டாலும் பரவாயில்லை, தனக்கு அரசியற்துறையில் பதவியும், அதிகாரமும் கிடைத்தால் போதும் என்ற நோக்கத்திலேயே ஜனாதிபதி செயற்படுகின்றார். நிறைவேற்று அதிகாரத்தைத் தனதாக்கிக்கொண்டு தன்னிச்சையாகச் செயற்படும் ஜனாதிபதி, தமது செயற்பாடுகளின் பின்விளைவுகளை வெகுவிரைவில் உணர்ந்துகொள்வார். அவருக்கும் அவரது கூட்டணிக்கும் மக்கள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் தகுந்தபாடம் புகட்டுவார்கள்.

சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் ஒன்றிணைந்து ஏனைய கட்சிகளுடன் கூட்டுச்சேர்ந்து, எதிர்காலத்தில் இந்த நாட்டில் அரசாங்கம் ஒன்றை அமைக்கலாமெனக் கனவு காண்கிறார்கள். அவர்களது பகற்கனவு பலிதமாகாது.

சு.க, ஜே.வி.பி கூட்டணியிடம், நாட்டுக்குப் பயன் விளைவிக்கும் உறுதியான கொள்கை, இலட்சியம் கிடையாது. இந்த நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினையையும் அவர்களால் தீர்த்துவிடமுடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

# செலவீனங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதிகளை தேர்தல் செலவுகளுக்கு பயன்படுத்தக்கூடாது

### திறைசேரி செயலருக்கு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

மேலதிக நடைமுறைச் செலவுகள், மேலதிக முதலீட்டுச் செலவீனங்கள், மறுசீரமைப்புச் செலவீனங்கள், புனரமைப்பு நடவடிக்கைகளுக்கான செலவீனங்கள் ஆகியவற்றுக்காக ஒதுக்கப்பட்ட நிதிகளை, தேர்தல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதை தவிர்த்துக்கொள்ளுமாறு திறைசேரி செயலாளருக்கு ஜனாதிபதி உத்தரவிட்டார்.

திறைசேரி வரவு - செலவுத்திட்டத்தின் பொறுப்பிலுள்ள இந்த நிதிகளை, தேர்தல் தொடர்பான திட்டங்களுக்கு பயன்படுத்துவது பற்றி தகவல் கிடைத்திருப்பதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. இத்தகைய செலவீனங்கள் இடம்பெறாமலிருக்க நடவடிக்கை எடுக்குமாறு, திறைசேரிச் செயலாளருக்கு ஜனாதிபதியின் செயலாளர் அறிவித்தார்.

அரச நிறுவனங்களுக்கான நிதியைப் பயன்படுத்தி, வாடகைக்கோ அல்லது குத்தகைக்கோ அனுப்பப்பட்ட வாகனங்கள் அனைத்தையும், அரச சொத்தின்கீழ்க்கொண்டு வருமாறும் ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

அவற்றைத் தேர்தல் நடவடிக்கைகளுக்கு பாவிப்பதைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் திறைசேரியின் செயலாளருக்கு ஜனாதிபதியின் செயலாளர் பணிப்புரை விடுத்தார்.

## மின்சார விநியோக நிதி ஒதுக்கீடு கிடைத்தும் இன்னமும் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை!

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மேற்குப் பகுதிக்கான மின்சார விநியோகத்துக்கு, நிதிஒதுக்கீடு கடந்த வருடம் கிடைத்தும், அதற்கான வேலைகளை மின்சார சபையினர் இன்றுவரை மேற்கொள்ளாமல் உள்ளமை மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை உருவாக்கியுள்ளது.

கடந்த வருடம் பின்தங்கிய கிராமங்களுக்கென குறித்தொதுக்கப்பட்ட நிதிமூலம் (PSDG) இந்த வேலைகளுக்கென 10 இலட்சம் ரூபா நெடுந்தீவு பிரதேசசபைக்கு கிடைத்தது. அதற்கான சகல வேலைகளையும் நெடுந்தீவு பிரதேச சபையினர் மேற்கொண்டபோதும், மதிப்பீட்டு வேலைகளை மட்டும் முடித்துவிட்டு, மேலதிகமாக இன்றுவரை எந்தவேலையினையும் மேற்கொள்ளமால் உள்ளனர்.

இந்த நிலையினால் அந்தப் பகுதி மக்களும், நெடுந்தீவு பிரதேசசபையினரும் பெரும் விசனம்தெரிவித்தனர். இதே வேளை, குறிப்பட்ட நிதி ஒதுக்கீடுமூலம் மேற்குப் பகுதி மின்சார விஸ்தரிப்புக்கென 5 இலட்சம் ரூபா இந்த வ்ருடம் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

## சங்கிலி திருடிய நபரொருவருக்கு 27 ஆம் திகதிவரை விளக்கமறியல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டச்சு வீதியில், தனியே நடந்து சென்ற பெண்ணிடம் தங்கச் சங்கிலி அபகரித்துச் சென்ற நபர்- சாவகச்சேரி பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு நகை மீட்கப்பட்டது.

இந்த நபரைப் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்தபோது, எதிர்வரும் 27 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் பா.சுப்பிரமணியம் உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது - கடந்த மாதம் வீதியால் தனியே சென்ற சாவகச்சேரி 1 ஆம் கட்டை வீதியைச் சேர்ந்த, சின்னத்தம்பி குணறஞ்சினி என்ற பெண்ணின் கழுத்தில் இருந்த தங்கச்சங்கிலியை, வீதியால் மோட்டார் சைக்கிளில் வந்த நபர் அபகரித்துச்சென்றுவிட்டார்.

சில நாட்களின் பின் அந்தப் பெண் மீசாலைக்குச் சென்ற வேளை அந்தத் திருடனை அடையாளங்கண்டு மீசாலைச் சந்தியில் கடமையில் நின்ற பொலிஸாரிடம் தெரிவித்ததையடுத்து, அந்த நபர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு பின்னர் சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். (34)

தெற்குத் திசையிலிருந்து - இந்திரஜித்

அரசியற்களம்

# விகாரைகளில் இருந்து நாடாளுமன்றம் நோக்கி...

இலங்கையில் அரசியல் என்ற நிலைப்பாட்டுக்கு அப்பால், பௌத்த தர்மம் நாடாளுமன்றத்துக்கு வரப் போகிற செய்தி வெளியாகியுள்ளது.

நாட்டில் பௌத்த பிக்குமார் இதுவரை காலமும் அரசியல் தலைவர்களை ஆட்டிப்படைக்கும் பணிகளில் ஈடுபட்டு வந்தனர். அவர்களே பிரதான அரசியலில் முடிவுகளையும் எடுத்து வந்தனர் (வருகின்றனர்). இந்த நிலையில், அவர்கள் தற்சமயம் பிரதான இலக்கிலேயே குறியை வைத்துவிட்டனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியின்போது, காலியிலிருந்து சமிரதேரர் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகியிருந்தபோதும், அவர் கம்யூனிஸக் கொள்கைகளைக் கொணடிருந்தமையால், நாடாளுமன்றத்துக்குள் மதிக்கப்படுபவராகவே திகழ்ந்தார்.

அவரின் கருத்துக்களும் - உதாரணங்களாக அல்லது ஆலோசனைகளாக எடுத்துக்கொள்ளப்பட்டன. லங்கா சமசமாஜக் கட்சியில் அங்கம் வகிதத அவர் - பொதுஜன ஐக்கிய முன்னணி, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் யுத்தம் புரிந்த காலத்தில், அதற்கு எதிராகக் குரலகொடுத்தவர்.

அத்துடன், நாடாளுமன்றத்திலும் தாம் ஒரு பௌத்தபிக்கு என்ற நிலைப்பாட்டுக்கு அப்பால் நின்று, நாடாளுமன்ற உறுப்பினராகவே செயற்பட்டு வந்தவராவார்.

இந்தச் சூழ்நிலையில், இலங்கையின் தற்போதைய அரசியலைத் தமது பௌத்த அடிப்படைவாதமாக, தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திவரும் எல்லாவல மேதாணந்த தேரர் உட்பட்டவர்கள் - சிஹல உறுமய தற்சமயம் ஹெல உறுமயக் கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிடப் போகிறார்கள் என்ற செய்தி - நாட்டில் புதியதொரு வன்முறைக் கலாசாரத்தை ஏற்படுத்திவிடும் என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 2 மாதங்களுக்கு முன்னர் ரஷ்யாவிற்குச் சென்றிருந்த வேளையில், சோமதேரர் காலமானதை அடுத்து, நாட்டில் ஏற்படுத்தப்பட்ட மதவாதக் கொந்தளிப்புத் தன்மை மீண்டும் ஏற்படுத்தப்படும் என்ற அச்சம், தற்சமயம் தேர்தலில் போட்டியிடும் மதகுருமார் - நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டால் நிகழும் என்பதில் ஐயமில்லை.

கிறிஸ்தவமதத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள் காரணமாக, பல தேவாலயங்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன. கிறிஸ்தவர்கள் சந்தேகத்துடன் நோக்கப்பட்டனர். இவ்வாறான சூழ்நிலையில் பௌத்த பிக்குமார் தமது நிலைப்பாட்டை நிரூபித்துக்கொள்ள முற்பட்டனர்.

இலங்கையின் மதம் பௌத்தம். எனவே, இங்கு அதன் தர்மங்கள் நிலைநாட்டப்பட வேண்டும், ஏனைய மதங்கள் புறந்தள்ளப்படவேண்டும் அல்லது அழிக்கப்படவேண்டும் என்ற எண்ணங்கள், பௌத்த பிக்குமாரால் ஏற்படுத்தப்பட்டன. இது கடந்த 20 வருடம் தமிழர், சிங்களவர் யுத்தம் என்பதைக் காட்டிலும், மேலும் ஒருபடி சென்று, பாரிய அச்சுறுத்தலுக்கு பௌத்த பிக்குமார் - இதுவரை மேற்கொண்டு வந்த அரசியல் சார்ந்த போக்குகள் காரணமாக, பௌத்தர்கள் (சிங்களவர்கள்) மத்தியில் பெரிதாக மதிக்கப்படுவதில்லை.

பௌத்த பிக்குமார் ஒரு தொழிலாகவே பிக்கு வாழ்க்கையை மேற்கொண்டுள்ளார்களோ என்ற எண்ணம் எழுந்துள்ளது. முன்னர் பிரதான அரசியலை அஸ்கிரிய மற்றும் மல்வத்த மகாநாயக்கர்களே தீர்மானித்து வந்தனர் எனக் கூறலாம்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன - ஜனாதிபதியின் ஆட்சிக் காலத்தில், இவர்கள மிகுந்த செல்வாக்கைப் பெற்றிருந்தனர். ஜே. ஆர்.ஜெயவர்த்தன- அரசியல்ரீதியாக எந்தவொரு முடிவை மேற்கொண்டாலும், அதில் பௌத்த மகாநாயக்கர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்தார்.

> **பிரதான அரசியலில் ஈடுபடாமல், தாம் பௌத்த தர்மத்தைக் காப்பதற்காகவே நாடாளு மன்றம் செல்வதாகத் தேசிய சங்கம சம்மேளன பௌத்த பிக்குமார் கூறியுள்ளனர். எனவே, இந்த முனைப்பு நிச்சயமாகத் தூய அரசியலுக்கு வித்திடப் போவதில்லை. மீண்டும் மீண்டும் மத வாதம் ஒன்றுக்கே மக்களை இட்டுச் செல்லப் போகிறது என்பது தெளிவு**

முதலில் கண்டிக்கு விஜயம் செய்யும் அவர் - அஸ்கிரிய மற்றும் மல்வத்த மகாநாயக்கர்களைச் சந்தித்து, தமது திட்டத்தை விளக்குவார். பின்னர் எவ்விதமான நல்ல திட்டங்களாக இருந்தாலுங்கூட, அந்தத் திட்டங்கள் அஸ்கிரிய மற்றும் மல்வத்த மகாநாயக்கர்களால் திருத்தியமைக்கப்படும் அல்லது முற்றாகக் கைவிடக்கூடியவாறு ஆலோசனை வழங்கப்படும்.

இவ்வாறான ஒரு கட்டத்துக் குப் பழக்கப்பட்டுப்போன ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும், ஒருவேளையில் அந்த மகாநாயக்கர்களின் ஆலோசனையிலிருந்து விலகிச்சென்றுவிட்டாரோ என்ற நிலைமை ஏற்பட்டது.

இனப்பிரச்சினைத் தீர்வின்போது, ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஜே.ஆர்.-ராஜீவ் ஒப்பந்தம், அதாவது இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை, இந்த மகாநாயக்கர்கள் எதிர்த்தனர்.

மாகாணசபைத் திட்டம் சிங்கள மக்கள் மத்தியில், பாரிய பிரச்சினைகளைக் கொண்டு வந்துவிடும் என அவர்கள் எச்சரித்தனர்.

ஆனால், அவர்கள்கூட ஜே.ஆரின் அரசியல் சாணக்கி யத்தை அறிந்திருக்கவில்லை என்பது, மாகாணசபைத்திட்டம் அமுல் செய்யப்பட்ட வேளையிலேயே தெரியவந்தது.

மாகாணசபைத் திட்டத் தெரிவில், இனங்களுக்கிடையே அதிகாரப் பரவலாக்கலைக் கொண்டு வந்துவிட்டது. எனவே, பௌத்தத்தின் பெரும்பான்மைத் தன்மை இழக்கப்படப்போகிறது என்றே பௌத்த மகாநாயக்கர்கள் எண்ணினர்.

ஆனால், ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அதற்கு இடமளிக்கவில்லை. வெறும் கடதாசி அதிகாரம் கொண்ட மாகாணசபைகளை, இனப்போருக்குத் தீர்வாக அவர் முன்வைத்தமை, உலகநாடுகள் மத்தியிலும் வரவேற்பைப் பெற்றிருந்தது.

தமிழ் மக்களால், தீர்வுக்காக மிகவும் நம்பப்பட்ட இந்தியாகூட அதனை விரும்பியது. தமது நாட்டின் மக்கள் குழுக்களுக்கு மத்தியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வுகளைவிட, இலங்கையின் வடக்கு-கிழக்குக்கு அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டு விடக்கூடாது என்பதில் இந்தியா கரிசனை கொண்டிருந்தது.

வடக்கு - கிழக்கு மக்களுக்கு, அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டால், அது அருகிலுள்ள தமிழ்நாட்டிலும் கொந்தளிப்புக்களை ஏற்படுத்திவிடும் என இந்தியா நினைத்தது.

எனவே, தமது எண்ணப்படி, தீர்வு ஒன்றை ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுடன் இணைந்து திணிப்பதில், இந்தியா தற்காலிக வெற்றியைக் கண்டது.

இந்த ஏற்பாடுகள் யாவும், மகாநாயக்கருக்கு பௌத்த பிக்குமார் முன்னரே அறிவித்தனரா? அல்லது மாகாணசபைத்திட்டம் அமுலான பின்னர் நடைமுறையில் உணர்ந்து கொண்டனரா? என்பது அவர்களுக்கு மட்டுமே தெரிந்த விடயமாகும்.

தற்சமயம் இலங்கையின் அரசியலில் - அஸ்கிரிய மற்றும் மல்வத்த மகாநாயக்கர்களின் செல்வாக்கைக் காட்டிலும், மாற்றுக்குழு பௌத்த பிக்குமாரின் செல்வாக்கு உயர்ந்துவிட்டது. மகாநாயக்கர்களுக்கு எதிராகச் செயற்படுகிறார்களோ என எண்ணும் வகையில், தேசிய சங்கம சம்மேளனத்தினர் அரசியலில் முன்னுரிமை பெற்றுவிடத் துணிந்துவிட்டனர்.

இதில் பிரதானமானவரே எல்லாவெல சோமானந்த தேரராவார். இவர் - குரங்குப்பாஞ்சான் முகாம் அகற்றப்படவேண்டும் என்ற கோரிக்கைக்காக, சிஹல உறுமய சகிதம் எதிர்ப்புப் பேரணி நடத்தியவர் என்பது யாவரும் அறிந்த விடயம்.



ஆன்மீகச் சிகரத்திலிருந்து - அரசியல் சேற்றில் குதிக்கும் பிக்குமார்

அவர் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதன் ஒரு கட்டமாகவே இந்தப் பேரணிகளில் பங்குகொண்டுள்ளார் என்பது தற்சமயம் தெரிய வந்துள்ளது.

பௌத்த குருமார் - அரசியலுக்கு ஆலோசனை வழங்கும் பணிகளிலிருந்து, தற்சமயம் நேரடி அரசியலிலேயே பங்கேற்றிருப்பது அதிக பாதிப்பைக் கொண்டுவரும் என்றே எச்சரிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, தற்சமயம் அரசியலுக்கு முன்வந்திருக்கும் பௌத்த பிக்குமார் - அஸ்கிரிய மற்றும் மல்வத்த மகாநாயக்கர்களின் ஆலோசனைகளையும் உதறித்தள்ளும் நிலைக்கு வந்துவிட்டார்கள் என்றே கருத இடமுண்டு.

ஏனெனில், அந்த மகாநாயக்கர்களின் நடவடிக்கைகள்- பௌத்த தர்மத்தைக் காக்கும் நிலையில் இல்லை என்பதை முன்னுணர்த்தியே, தேசிய சங்கம சம்மேளன குருமார் அரசியலில் ஈடுபட்டுள்ளனர்.

பிரதான அரசியலில் ஈடுபடாமல், தாம் பௌத்த தர்மத்தைக் காப்பதற்காகவே நாடாளுமன்றம் செல்வதாகத் தேசிய சங்கம சம்மேளன பௌத்த பிக்குமார் கூறியுள்ளனர். எனவே, இந்த முனைப்பு நிச்சயமாகத் தூய அரசியலுக்கு வித்திடப் போவதில்லை. மீண்டும் மீண்டும் மதவாதம் ஒன்றுக்கே நாட்டின் மக்களை இட்டுசசெல்லப் போகிறது என்பது தெளிவு.

நாட்டின் பிரதான அரசியலில், நேரடியாகப் பௌத்த பிக்குமார் பெருமெடுப்பில் தலையிடும் அளவிற்கு, இலங்கையின் அரசியல் மோசமடைநது விட்டது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற கட்சியில் அங்கம் வகிக்கும் மக்கள் விடுதலை முன்னணியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் நாட்டின் பிரதான அம்சமான இனப் பிரச்சினைத் தீர்விலே முக்கியத்துவத்தை வழங்காமலேயே, அதாவது உடன்பாட்டைக் காணாமலே, ஒப்பந்தம் ஒன்றின்மூலம் அரசியலில் ஈடுபட்டுள்ளன.

அடுதத ஆட்சியையும் அமைக்கப்போவதாக அந்தக் கட்சிகள் கங்கணங்கட்டி நிற்கின்றன. மறுபுறத்தில் 2 வருடங்களுக்குள் ஆட்சியை இழந்தநிலையில், ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் சமாதானக் கோஷத்துடன் தேர்தலில் போட்டியிடுகிறது. ஆனால், இரண்டு கட்சிகளுமே நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மை வெற்றியைப் பெறப்போவதில்லை என்றநிலை ஏற்பட்டுள்ளது.

இது இலங்கையின் அரசியலில் ஆரோக்கியமான அம்சமலல, அஸ்தமிக்கும் அம்சமாகும். நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கும் கட்சிகள் பெரும்பான்மையை இழந்து நிற்பது, ஆரோக்கியமான அரசியலுக்குப் பாரிய அச்சுறுத்தலாகும்.

மேலும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற ஆட்சித் தீர்மானம் எடுக்கக் கூடிய கட்சிகள்- தமது நிலைப்பாடு தொடர்பில் அரசியலுக்கு ஈடுகொடுக்கும் வகையில், தமது மக்களின் பேரம்பேசும் சக்தியை உறுதிப்படுத்தும் வகையில், தர்மானம் எடுக்க முடியாமல் இருப்பது கவலையான அம்சமாகும்.

இது குறிப்பாக அந்தக் கட்சிகளைப் பாதிக்கப்போவதில்லை. நேரடியாக அந்தக் கட்சிகளை நம்பியுள்ள மக்களையே பாதிக்கிறது. சிங்கள மக்களின் உறுதிப்பாட்டை நிலைநிறுத்த, பௌத்த குருமார் நேரடி அரசியலில் இறங்கிவிட்டனர்.

இந்தநிலையில், ஏனைய மத குருமார் நேரடி அரசியலில் மதங்களைச் சார்ந்த கட்சிகளுக்கு ஆலோசனைகளை வழங்கவேண்டும் என்ற அவசியம் உணரப்பட்டுள்ளது.

ஏனெனில் தமிழ், சிங்கள, முஸ்லிம், கிறிஸ்தவ மதங்கள் அனைத்துமே மக்களை நல்வழிப்படுத்தும் மதங்களாக இருப்பதால், தற்போதைய காலகட்டத்தில் தமது ஆலோசனைகளைச் சிறிய கட்சிகளுக்கு ஆட்சித் தீர்மான கட்சிகளுக் குரிய முறையில் வழங்கவேண்டியது இநத மதகுருமாரின், மதத்தலைவர்களின் கடமையாகும். ◆

புலம்பெயர் வாழ்வின் பதிவுகள் - பகுதி XII - சிவா சின்னப்பொடி

*(நேற்றைய தொடர்ச்சி...)*

'அண்ணை நீங்கள் தமிழா' என்பார்

'ஆமாங்க ' என்றதும் அந்த நபர் நீங்கள் சிலோன்காரரா? என்று திரும்பிக்கேட்பர்.

வார்கள்.

காலையிலிருந்து மாலை வரை தமிழர்களைத் தேடி அலைந்து, களைத்தபின்பு - இரவுவர, மின்னொளி வெள்ளத்தில் மிதக்கும் பாரிஸ் நகரத்தில் - படுத்து உறங் சென்றுவிடுவதில்லை.

இயல்பாகவே ஓடிவந்து உதவி செய்யும் குணம் அவர்களிடம் இருப்பதை மறுக்கமுடியாது. அரேபியர்களின் மூத்த தலைமுறையினரிடமும் இத்தகைய உதவும் மனப்பான்மை

# தொடரும் அகதிவாழ்வின் அவலங்கள்

இவர்கள் ஓம் என்று சொல்ல வக்கன்சுக்கு வந்தீங்களா? (விடுமுறைக்கு) என்று அவர் திருப்பிக் கேட்பார்.

இல்லை நாங்கள் அகதியாக வந் திருக்கிறம் என்று நம்மவர்கள் சொல்வார்கள். அகதியா அப்படியயெண்டா என்ன? என்று அவர் திருப்பிக்கேட்பார்.

நம்மவர்கள் நமது நாட்டுப் பிரச்சினையை விளங்கப்படுத்த முற்படுவர்.

அவர் குறுக்கிட்டு ரொம்பக் கஷ்டம் இல்லை.. சரி சரி எனக்கு நேரமாச்சுங்க நான் வாரன்- என்று கூறி நழுவிச்செல்வார்.

நம்மவர்கள் இடைமறித்து அண்ணை எங்களுக்கு எங்கையாவது தங்கிறதுக்கு இடமிருந்தா சொல்லுறிங்களா என்று கொஞ்சிக் கேட்பார்கள்.

"இங்க தான் நிறையக் ஹோடடல்கள் இருக்கு போய் தங்கிக்கிங்க" என்று சொல்லிவிட்டு அவர் நடையைக் கட்டிவிடுவார்.

அவர் பிரெஞ்சுக் குடியுரிமை பெற்ற ஒரு பாண்டிச்சேரிக்காரராக இருப்பார்.

நம்மவர்கள் அவர் செல்லும் திசையை வெறித்துப்பார்த்துக் கொண்டு விரக்தியடைந்து நிற்பார்கள் அதற்குள் இருளவும் ஆரம்பிதது விடும்.

80 ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் பாரிஸ் நகரத்தில் நம்மவர்களை கொண்டுபோய் இறக்கிவிடும் பிரயாண முகவர்கள், 'அங்கே - நிறைய தமிழர்கள் இருக்கிறார்கள்- தேடி வந்து உதவி செய்வார்கள், தங்க இடம் தருவார்கள், வேலை வாங்கித் தருவார்கள் என்றெல்லாம் காதில் பூச்சுற்றிவிட்டுச் செல்குவதற்கு ஒரு இடத்தை எப்படித் தேடுவது என்கின்ற பயம், நம்மவர்களின் நெஞ்சை அடைக்கும் துக்கம் மனதை அழுத்த, கண்ணெலலாம் கலங்கி அழுகைவரும். கோடைகாலம் என்றால் ஓரளவுக்குத் தாக்குப்பிடிக்கலாம் குளிர்காலம் என்றால் சொல்லவே வேண்டாம.

கோடைகாலத்தில் பேருந்து தரிப்பிடங்களும், பூங்காக்களின் இருக்கைகளும், ஈபிள் கோபுரத்தின் அருகேயுள்ள படிக்கட்டுகளும். புல்வெளிகளுநதான் நம்மவர்களின் இரவு நேர தங்குமிடங்களாக இருந்தன.

குளிர்காலத்தில் எங்குமே செல்ல முடியாது... ஒரு அரை மணிநேரம் வெளியில் நின்றாலே கைகால்கள் குளிரேறி, மரத்துவிடும். உதடு வெடித்து இரத்தம் வரும். கைகால் நகங்களில் ஊசியால் குத்தியதை விட அதிகமாக சுள்ளென்று வலிக்கும்...

இவ்வாறு குளிருக்குள் அகப்படுச் சாவோடும், வாழ்வோடும் போராடிக்கொண்டிருந்த நமது மக்களுக்கு - அரேபியர்கள் நிறையவே உதவி செய்திருக்கின்றார்கள்.

இவ்வாறு குளிர்காலத்தில் தெருவோரத்தில் போக்கிடமின்றி நம்மவர்கள் தவிப்பதை காணும் இவர்கள் - செஞ்சிலுவைச் சங்கம் அகதிகளுக்கான உதவ! அமைப்பு, சுக்கூர் கத்தலக் முதலான அமைப்புக்களுக்கு அழைத்துச்சென்று, அந்த அமைபபுக்களால நடத்தப்படும் அகதி முகாங்களில் தங்குவதற்கு ஏற்பாடு செய்திருக்கின்றார்கள்.

கறுப்பர்கள் நம்மவர்களோடு விரோதம் பாராட்டினாலும், நம்மவர்கள் ஆபத்தில் சிக்கியிருப்பதைப் பார்த்தால் - உதவி செய்யாமல் அதிகமாக இருந்திருக்கின்றது. குளிர்காலத்தில் போக்கிடமின்றித் தவித்த நம்மவர்கள் பலருக்கு உணவு - உடை மற்றும் தங்குதவற்கு இட ஏற்பாடு பலவகை உதவிகளையும் செய்திருக்கின்றார்கள்.

1985 இற்கு முன்னர் பாரிசுக்குச் சென்ற 90 வீதமான தமிழர்கள் இவ்வாறு நிர்க்கதியாக நடுரோட்டில் குளிரில் நின்ற அனுபவத்தை பெற்றிருக்கின்றார்கள்.


அந்தக்காலத்தில் 20 சதுர மீற்றர் அளவுள்ள ஒருசிறிய அறைக்கு 2500 பிராவ் வாடகை கொடுக்க வேண்டும். 2 அறையுள்ள ஒரு அறையானால் 4000 பிராவ் கொடுக்க வேண்டும்.

அந்தக் காலத்தில் நம்மவர்கள் செய்த வேலைக்குரிய மாதச் சம்பளம் 3500 பிராவ்தான். இதில் சாப்பாட்டுச் செலவு, போக்குவரத்துச் செலவு, மின்சாரக்கட்டணம் - எல்லாவற்றையும் கணக்குப் பார்த்தால் தனியாக வாடகைக்கு வீடு எடுப்பது என பது சாத்தியமே இல்லாத ஒன்றாக இருநதது.

இதனால் 5 அல்லது 6 நண்பர்கள ஒன்றாகச் சேர்ந்து ஒரு அறையை வாடகைக்கு எடுத்து மொத்தச் செலவைச் சமமாக பங்கிட்டுக் கொள்வார்கள் இப்படிப் பங்கிடும் தொகைக்கு சமரிக்காசு என்று பெயர். இவ்வாறு 5 அல்லது 6 பேர் என்று தங்கும்போது, அவர்களது உறவினர்கள் நண்பர்கள் என்று 10 பேராவது வந்து சேந்துவிடுவார்கள்.

அந்த சின்ன அறையில் 10 முதல் 15 பேர்வரை தங்க வேண்டிய நிர்பந்தம் ஏற்படும். இவ்வாறு ஆட்கள் கூடக்கூடப் பிரச்சினைகளும் கூடிவரும். அதாவது அநேகமான எல்லா அறைகளிலும் 1 ரிவி - டெக் மற்றும் மியூசிக் என்பன இருக்கும். (தொடரும்..)

# ஹெயிட்டி ஜனாதிபதி ஜீனுக்கு எதிராக தலைநகரில் மாணவர் ஆர்ப்பாட்டம்



ஹெயிட்டியின் தலைநகரான 'போட் ஓ பிரின்ஸ்'சில் - அந்நாட்டின் ஜனாதிபதி 'பேட் ராண்ட் அரிஷ்ரைட்' இற்கு எதிராக, 500 இற்கும் மேற்பட்ட மாணவர்களால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் 20 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் காயமடைந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின்போது அரசுக்குச் சார்பான குழுக்களுக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டிருந்தது. இந்த மோதலில் அரசுக்குச் சார்பான குழுக்கள் - கத்தி, துப்பாக்கி ஆகியவற்றைப் பாவித்தாகவும் தெரியவருகிறது.

பொலிஸார், ஆர்ப்பாட்டம் நடந்த இடத்தில் காணப்பட்டபோதும் மோதலைத் தடுப்பதற்குரிய எந்தவிதமான முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே, வெளிநாட்டு இராஜதந்திரிகள் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

கெயிட்டியில் அதிகரித்துவரும் மனித நேயத்திற்கு எதிரான பிரச்சினைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள்சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

கெயிட்டியின் வட பகுதியில் அரசிற்கெதிரான போராளிகளால் பல கிராமங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

2000 ஆம் ஆண்டிற்குப் பின் கெயிட்டியில் தேர்தல் நடத்தப்படவில்லை. இதுவே ஜனாதிபதி 'அரிஷ்ரைட்'டிற்கு எதிரான ஆர்ப்பாட்டங்களுக்குக் காரணமாக அமைந்தது.

அத்துடன் இந்தப் பிரச்சினை தொடர்பாக கனடா, அமெரிக்கா, பிரான்ஸ், கரிபியன் ஆகிய நாடுகளின் தலைவர்கள் ஜனாதிபதி அரிஷ்ரைட்டை சனிக்கிழமை சந்திக்கவுள்ளனர். இதன் மூலம் உயர்மட்டக் குழுவினர் அடங்கிய பேச்சுவார்த்தை ஒன்றிற்கு ஏற்பாடாகியுள்ளது.

சுதந்திரமான அரசொன்றை கெயிட்டியில் உருவாக்குவதே வெளிநாட்டு இராஜதந்திரிகளின் திட்டமாக அமைந்திருக்கிறது. இதன் மூலம் சுதந்திரமான பிரதம மந்திரியின் கீழ் அமையும் அரசுக்கு 'அரிஷ்ரைட்' தொடர்ந்தும் ஜனாதிபதியாகச் செயற்படவுள்ளார்.

இதனிடையே ஜனாதிபதி 'அரிஷ்ரைட்'



பதவி விலகினால் மாத்திரமே எந்தவிதமான தீர்வு தொடர்பாகவும் சிந்திக்க முடியுமென, எதிர்க்கட்சிகளும் போராளிகளும் தெரிவித்துள்ளனர்.

## ஜப்பானின் கேந்திர நிலைய பாதுகாப்புகள் அதிகரிப்பு



ஜப்பானில் - விமானநிலையம், அணுசக்தி அமைப்புக்கள், அரசாங்க காரியாலயங்கள் ஆகியவற்றில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. அரசாங்க அதிகாரிகள், தீவிரவாதிகளின் தாக்குதல்கள் நடைபெறலாமெனக் கருதுகின்றனர்.

அண்மையில், ஜப்பானிய அரசாங்கம் ஈராக்கிற்குச் சமாதான பணிகளுக்காக படையினரை அனுப்பியிருந்தது. இதன் பின்னரே முக்கியமான இடங்களில் பாதுகாப்பினை அதிகரித்துள்ளனர்.

அத்துடன் பிரதம மந்திரியின் இல்லம், அமெரிக்கத் தூதுவராலயம் உட்பட 650 முககிய இடங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ரோக்கியோவில் அமைந்துள்ள பாதுகாப்பு அமைச்சின் கட்டிடத்திற்கு அருகில் இவ்வார ஆரம்பத்தில் குண்டுவெடிப்புகள் நிகழ்ந்துள்ளன. ஆனால் எவரும் காயப்படவில்லை.

ஜப்பானியப் படையினர் ஈராக்கில் பணிபுரிவதை இடதுசாரிகள் விரும்பவில்லை எனவும் இதனால், தற்போது நடைபெற்ற தாக்குதல்களுக்கு அவர்களே காரணமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஈராக்கில் தேர்தலுக்கு சாத்தியம் இல்லை

## ஐ.நா. செயலாளர் கோபி அனான் தெரிவிப்பு



ஜூன் மாதம் 30 ஆம் திகதி ஈராக்கியர்களிடம் அதிகாரம் ஒப்படைக்கப்படுவதற்கு முன்னர் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான சாத்தியங்கள் இல்லை என, ஐ.நா. செயலாளர் கோபி அனான் கடந்த புதன்கிழமை தெரிவித்திருந்தார்.

இதனால், ஈராக்கிய தலைவர்களும் ஈராக்கிய அமெரிக்க நிர்வாகிகளும் அடுத்து எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்ந்து வருகின்றனர்.


இதனிடையே, ஈராக்கிய ஷியா முஸ்லிம்களின் ஆன்மீகத் தலைவர் - ஜேர்மன் சஞ்சிகை ஒன்றுக்குத் தெரிவித்த பேட்டியில், ஈராககில் உள்ள அமெரிக்க நிர்வாகிகள் குறுகிய காலத்துள் ஆட்சி அதிகாரத்தைக் கையளிக்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

ஆயதுல்லா சிஸ்டானியின் - 'நஜாப்' பில் அமைந்துள்ள இல்லத்திற்கு அருகில், பல நூறு ஆதரவாளர்கள் வெள்ளிக்கிழமை ஆன்மீகத் தலைவர் சிஸ்டானியின் கருத்துக்கு ஆதரவு தெரிவித்து ஊர்வலங்களை நடத்தியிருந்தனர்.

அத்துடன், ஆன்மீகத் தலைவர் ஆயதுல்லா சிஸ்டானியின் கருத்திற்கு ஈராக்கியர்களும் மதத் தலைவர்களும் ஆதரவு தெரிவித்தனர்.

இதனிடையே, தேர்தல் தேவையென்றாலும் அதை உடன் நடத்துவது சாத்தியமில்லை என 'ஷனி' முஸ்லிம் அமைப்பின் தலைவர் 'நாசர் - அல் - ஷடெஷி' - பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்தார்.

# விசாரணைகள் ஏதுமின்றி தடுப்புக்காவலில் 'படில்லா'



அமெரிக்கப் பிரஜையான 'படில்லா', அமெரிக்க அரசுக்கெதிராக, ரேடியோக் கதிர்களை வெளிப்படுத்தும் குண்டுத் தாக்குதல்களை மேற கொள்வதற்கு முயற்சிகள் மேற்கொண்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, 2000 ஆம் ஆண்டு மே மாதம் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

கடந்த 2 ஆண்டுகளாக நீதியான விசாரணைகளின்றி படிலாவைத் தடுத்து வைத்திருப்பதாக படிலாவுக்காக வாதிடும் சட்டத்தரணி 'ஜோர்ஜ் படிலா' தெரிவித்தார்.

பயங்கரவாதத்திற்கெதிரான போர் எனக் கைது செய்யப்பட்டவர்கள் மீதான நீதி விசாரணைக்கு அமெரிக்காவில் அனுமதி மறுக்கப்பட்டு வருகிறது.

இதனிடையே அமெரிக்கப் பிரஜையான 'யாசெர் இசாம் கம்டி' - எதிரியுடன் இணைந்து போராடியவர் எனத் தெரிவித்து ஆப்கானிஸ்தானில் கைது செய்யப்பட்டு தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இருவரது குற்றங்களையும் ஆராய்ந்த உயர் நீதிமன்றம், அமெரிக்க ஜனாதிபதி - தொடர்ந்து தடுத்துவைக்க வேண்டாம் எனக் கட்டளையிட்டால் மாத்திரமே அவர்களுக்கெதிரான குற்றங்களை விசாரிக்கமுடியுமெனத் தெரிவித்தது.

## உலக நோக்கு

# தீப்பிடித்த அமெரிக்க போர் விமானம் அவசரமாக டெல்லியில் தரையிறக்கம்



நடுவானில் பறந்த அமெரிக்கப் போர் விமானத்தின் என்ஜினில் தீப்பிடித்தது. இதனால், அந்த விமானம் டெல்கி விமான நிலையத்தில் அவசரமாகத் தரை இறக்கப்பட்டது.

மத்திய பிரதேச மாநிலத்தில் இந்திய - அமெரிக்க விமானப்படை விமானங்களின் கூட்டு போர் ஒத்திகை நடந்தது. இதில் கலந்துகொண்ட அமெரிக்க விமானப்படையின் 'கே - சி 10' ரக விமானம் நேற்று புதுடெல்கி விமான நிலையம் சென்று எரிபொருள் நிரப்பியவுடன் 111 விமானப்படை வீரர்களுடன் புறப்பட்டுச் சென்றது.

இந்த விமானம் புறப்பட்ட சில நிமிடங்களில் ஒரு என்ஜினில் தீப்பிடித்ததால் அவசர கால அலாரம் ஒலித்தது. இதனால், அந்த விமானம் டெல்கி விமான நிலையத்தில் அவசரமாகத் தரையிறங்குவதாகவும், பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கும்படியும், கட்டுப்பாட்டு அறைக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து விமான நிலையத்தில் தீயணைப்பு வண்டிகள், மருத்துவ வாகனங்கள் தயார் நிலையில் நிறுத்தப்பட்டன.

இந்த நிலையில் அந்த விமானம் தரையிறங்குவத்ற்கு முன்னதாக, விமானி - தீப்பிடித்த என்ஜினின் செயற்பாட்டை நிறுத்திவிட்டு மற்றொரு என்ஜினை இயக்கினார். இதன் பின்னர் அந்த விமானம் அவசரமாகத் தரையிறங்கியது.

எந்தவித அசம்பாவிதமும் ஏற்படாமல், விமானம் பத்திரமாகத் தரையிறங்கி நின்றது. உடனடியாக விமானத்தில் இருந்த வீரர்கள் கீழே இறங்கினார்கள். இதன் பின்னர் தொழில்நுட்ப வல்லுனர்கள் சென்று விமானத்தின் தீப்பிடித்த என்ஜினைப் பரிசோதித்தனர். அந்த விமானம் தனியிடத்தில் நிறுத்தப்பட்டது.

விமானம் சரிசெய்யப்பட்ட பின்னர் இன்று புறப்பட்டுச் செல்லும் என்று தெரிவிக்கப்படுகிறது.

# பாகிஸ்தானில் எரியூட்டி அழிக்கப்படும் கிராமப்புற பெண்கள் பாடசாலைகள்!

பாகிஸ்தானின் பின்தங்கிய கிராமப் பகுதியில் இதுவரை பெண்கள் கல்வி கற்கும் எட்டுப் பாடசாலைகள் தீவிரவாத போக்குள்ள மதவாதிகளினால் எரியூட்டப்பட்டுள்ளன. இவை பெண்கள் கல்வி பயிலும் பாடசாலைகள் ஆகும். கடந்த வியாழக்கிழமை ஒன்பதாவது பாடசாலையும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. இந்தப் பாடசாலை ஆண்கள் கல்வி பயிலும் பாடசாலையாகும்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இதுவரை 20 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். எரியூட்டப்பட்ட பாடசாலைகள் அனைத்தும், வெளிநாட்டு நிதியுதவியுடன் நடத்தப்பட்டுவந்த தனியார் பாடசாலைகளாகும்.

பாகிஸ்தானில் பின்தங்கிய பிரதேசங்களில் கல்வி மேம்பாட்டைத் தடைசெய்வதற்காகவே பாடசாலைகள் மீது இவ்வாறான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, பி.பி.சியின் கரோன் ரசீட் தெரிவித்தார். பெண்களின் கல்வியை எதிர்ப்பவர்களே இந்தத் தாக்குதல்களை நடத்தியிருப்பதாக அதிபர்கள் தெரிவித்தனர்.

ஆனால், வெளிநாட்டு உதவியுடன் நடத்தப்படும் தனியார் பாடசாலைகளில் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருப்பதால் வெளிநாட்டுத் தொடர்புகளை விரும்பாதவர்களினால் இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கக்கூடும் எனவும் ஒருசாராரால் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், பாகிஸ்தானில் கல்வி கற்றவர்களின் எண்ணிக்கை 12 வீதமாக அமைந்துள்ளதாகவும், இவற்றை மேம்படுத்துவதற்காகவே தொண்டர் நிறுவனங்கள் முன்வந்துள்ளதாகவும், இந்தத் தொண்டுகள், கடும்போக்குக்கொண்ட இஸ்லாமியர்களினால் சந்தேகத்திற்கிடமாக நோக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தி.மு.க. வேட்பாளர் பட்டியல்; கருணாநிதி வெளியிடுவார்

விருது நகரில் நடக்கும் தி.மு.க. மாநாட்டில் இன்று கருணாநிதி சிறப்புரையாற்றும்போது 15 தி.மு.க. வேட்பாளர் பட்டியலை வெளியிடுவார் என்று கூறப்பட்டது. ஆனால், தேர்தல் திகதி அறிவிப்புத் தள்ளிப் போய்விட்டதால், அடுத்த வாரம் தி.மு.க. வேட்பாளர் பட்டியலை அவர் வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய சென்னை தொகுதியில் முரசொலிமாறனின் மகன் தயாநிதிமாறன் வேட்பாளராக அறிவிக்கப்படவுள்ளார்.மேலும் தயாநிதிக்கு வாக்களிக்கக் கோரி மத்திய சென்னைக்குட்பட்ட பகுதிகளில் விளம்பரங்கள் எழுதப்பட்டுவருகின்றன. எனவே, தயாநிதிமாறன் மத்திய சென்னை வேட்பாளராக அறிவிக்கப்படுவது உறுதி ஆகிவிட்டது.

தென் சென்னையில் டி.ஆர்.பாலு, வட சென்னையில் செ.குப்புசாமிக்கு மாற்றாக யாரும் மும்முரமாக இல்லை. ஸ்ரீ பெரும்புத்தூர் தொகுதிக்கு 32 பேர் மனுக் கொடுத்துள்ளனர். இந்தத் தொகுதியில் போட்டியிட முன்னாள் அமைச்சர் சுந்தரத்தைவிட தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் கிருஷ்ணசாமிக்கு அதிக வாய்ப்புள்ளது.

கடலூர் தொகுதி - ஆதிசங்கர், ஐயப்பன் ஆகிய இருவரில் ஒருவருக்குக் கிடைக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## உயர்பாதுகாப்பு வலய மீள்குடியமர்வு

# படையதிகாரிகளுடன் பேச்சு நடத்தி விரைவில் இணக்கம் காணப்படுமாம்

## ஈ.பி.டி.பிக்கு சந்திரிகா உறுதி

முப்படைத் தளபதிகள் மற்றும் பாதுகாப்பு உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக இணக்கம் காண நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க- ஈ.பி.டி.பி செயலாளர் டக்ளஸ் தேவாணந்தாவுக்கு உறுதியளித்ததாக அந்தக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பி செயலாளர் டக்ளஸ் தேவானந்தா - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மாளிகையில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்தப் பேச்சுக்களின்போது, உயர்பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ள பகுதிகளில், அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் மீளக்குடியமர்வது, இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்பட்டு இயல்பு நிலை திரும்பும்வரையில் இடம்பெயர்ந்த மற்றும் தொழில்வாய்ப்பு இழந்த மக்களுக்கான உலர் உணவு நிவாரணம் தொடர்ந்தும் கிடைக்கச் செய்வது மற்றும் யாழ்ப்பாண மாநகர பொது நூலகத்தை வாசகர்களின் பாவனைக்குத் திறந்துவிடுவது போன்ற விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

முப்படைக்களின் தளபதிகள் மற்றும் பாதுகாப்புத்துறை உயர் அதிகாரிகள் ஆகியோருடன் உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்குடியமர்வு தொடர்பாக பேசி இணக்கம் காண நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் உலர் உணவு நிவாரணம் சரியான முறையில் தொடர்ந்து கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அத்துடன், யாழப்பாண மாநகர பொதுநூலகம் - வாசகர்களின் பயன்பாட்டுக்கு இயன்றளவு விரைவில் திறந்துவிட உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்ததாக இந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாணத்தில்...

யாக போட்டியிடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சுயேட்சைக் குழுவில் முன்னாள் யாழ். நகர மேயர் செல்லன் கந்தையன், கூட்டணியின் மூத்த உறுப்பினர் முத்துலிங்கம், முன்னாள் மாநகரசபை உறுப்பினர்களான அரவிந்தன், தங்கமுகுந்தன் மற்றும் பரராஜசிங்கம் உள்ளிட்ட பலரும் இடம்பெறக்கூடும் என்று உத்தியோகப்பற்றற்ற தகவல்கள் தெரிவித்தன.

எனினும், தாம் இதுவரை தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக எந்த முடிவையும் எடுக்கவில்லை என தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி பி.பி.சி. பேட்டியில் குறிப்பிட்டார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் வநத ஆனந்தசங்கரிக்கு பலத்த இராணுவப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரான்லி வீதியிலும் கூட்டணி அலுவலகம் அமைந்துள்ள ஒழுங்கையிலும் பெருமளவு இராணுவத்தினரும், பொலிஸாரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சி...

இந்த விபத்துச் சம்பந்தமாக கிளிநொச்சி காவல் பணிமனையினர் விசாரணைகளை மேற்கொண்டுவருவதாகவும் தெரியவருகிறது.

## அரச படைகள்...

மாகவிருந்த போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு இரண்டு வருடங்கள் பூர்த்தியாகின்றன.

போர்நிறுத்தத்தைக் கண்காணிப்பதற்காக 15 பேருடன் ஆரம்பிக்கப்பட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தற்போது 57 பேருடன் இயங்குகின்றது.

நோர்வே, சுவீடன், டென்மார்க், பின்லாந்து, ஐஸ்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த அதிகாரிகள் இதில் இணைந்துள்ளனர்.

போர்நிறுத்தம் அமுலான காலப்பகுதியில் இருசாராரும் அதனை மீறிய சம்பவங்கள் பற்றியும் அறிவிக்கப்பட்டுள்ளன. சிறுவர்களை படைக்குச் சேர்ப்பது, ஆட்களைக் கடத்துவது உள்ளிட்ட குற்றச்சாட்டு விடுதலைப் புலிகள் மீதும், அரச படைகள் அச்சுறுத்தல் நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் ஐரோப்பிய சமூகம் நடத்திய ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் பல சவால்களுக்கு மத்தியில் போர்நிறுத்தம் உறுதியாக முன்னெடுத்துச் செல்லப்படும் விடயத்தில் நம்பிக்கையுடன் இருப்பதாக மேஜர் ஜெனரல் புறூவ் ஹெறாவ்டே மேலும் தெரி[illegible]தார்.

## தமிழ்த்தேசியக் கூட்ட...

யின் முகாமைத்துவப் பணிப்பாளரான அரியனேத்திரன் பாக்கியச்செல்வம், மற்றும் ஆசிரியரும் ஊடகவியலாளருமான சேனாதிராஜா ஜெயானந்தமூர்த்தி, கன்னங்குடாவைச் சேர்ந்த கலாசார உத்தியோகத்தர் கதிர்காமர் தங்கேஸ்வரி, வாகரையைச் சேர்ந்த பாடசாலை அதிபர் சுப்பிரமணியம் அரசரத்தினம் ஆகியோரே போட்டியிடவுள்ளனர்.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்தமுறைத் தேர்தலில் வெற்றிபெற்ற தங்கவடிவேல், ஞானமுத்து கிருஸ்ணபிள்ளை இந்த முறை தேர்தலில் போட்டியிடவில்லை.

அம்பாறை மாவட்டத்தில் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு தலைமையில் ஒன்பது பேர் போட்டியிடவுள்ளனர்.

இவர்களின் விபரங்கள் வருமாறு- அரியநாயகம் சந்திரநேரு, கனகசபை பத்மநாதன், சாமித்தம்பி விவேகானந்தன், எஸ்.இராஜநாயகம், சீனித்தம்பி சுந்தரலிங்கம், சம்புநாதன் தினகரன்பிள்ளை, தோமஸ் தங்கத்துரை வில்லியம், சபாபதி யோகாம்பிகை, இராசநாயகம் சிவகுமார் ஆகியோரே போட்டியிடவுள்ளனர்.

இதேவேளை, ஐக்கிய சோசலிச சுதந்திர முன்னணி என்ற கட்சி நேற்று முன்தினம் காலை பத்து மணிக்கு மட்டக்களப்பு செயலகத்தில் வேட்புமனுவைத் தாக்கல் செய்தது.

ஏறாவூர் ஆபிதா உம்மா முகமட் சாலி தலைமையில் பின்வருவோர் இந்த வேட்புமனுவில் அடங்குகின்றனர்.

ஏறாவூரைச் சேர்ந்த இப்ராலெவ்வை சுபைதீன், காத்தான் குடி அப்துல் கபூர் முகமட் றிஸ்வான், காத்தான்குடி ஆதாம்பாவா ரவூடின், ஏறாவூர் அலிகார் சுலைகா உம்மா, வாழைச்சேனை முகமட் சம்சுதீன் நாசர் வாழைச்சேனை முகமட் காசிம் லத்தீப்,

அத்துடன், காத்தான்குடி, ஏறாவூரைச் சேர்ந்த இருவர் சுயேட்சையாக போட்டியிட மட்டக்களப்பு செயலகத்தில் வேட்புமனுத்தாக்கல் செய்துள்ளனர்.

## சீருடையில்...

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தின்போது - 390 சிங்கப்பூர் சங்கிலிகள் அடங்கிய சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான 800 பவுண் நகைகளே திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தினமும் வீட்டிலிருந்து கடைக்கு நகைகள் எடுத்துச் செல்லப்படுவதை நன்கு அவதானித்தே இத்துணிகரத் திருட்டு மேற்கொள்ளப்பட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் சாவகச்சேரி நகரப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருப்பதுடன், பொதுமக்கள் மத்தியில் அச்ச உணர்வையும் தோற்றுவித்திருக்கிறது.

இத்துணிகரத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக நகைக்கடை உரிமையாளர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் புகார் செய்ததைத் தொடர்ந்து பொலிஸார் தேடுதல்களை மேற்கொண்டபோதும இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை.

பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(46,29,202,25)

## இரண்டொரு...

என்று தமிழர் விடுலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் கு[illegible]பிட்டார். இந்தப் பேட்டியில் அ[illegible] மேலும் தெரிவித்ததாவது -

2001 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இணைந்துகொண்ட கட்சிகள் எதுவும போட்டியிடக்கூடாது. இந்த யோசனைக்கு தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் தமிழ்மக்களின் பிரச்சினைகளை உண்மையிலேயே கருத்திற்கொண்டால் இன்னும் காலம் கடந்துவிடவில்லை. விடுதலைப் புலிகளை தேர்தலில் நிறுத்திக் கொள்ளலாம்.

தற்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குள் குத்துவெட்டுக்கள் இடம்பெற்றுவருகின்றன. நான் கட்சி அடிப்படையிலோ, சுயேட்சையாக போட்டியிடுவது பற்றி இன்னும் தீர்மானம் மேற்கொள்ளவில்லை. எனது முடிவு பற்றி இரண்டொரு நாட்களில் தெரியவரும் என்றார்.

## ஈ.பி.டிபி...

பியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

பெரும்பாலும் நாளை தமது கட்சியின் வேட்பாளர்கள் விபரம் வெளியாகும் என்றும் தெரிவித்த ஈ.பி.டி.பி. பேச்சாளர், வேட்பாளர்களின் விபரத்தை வெளியிடுவதற்கு மறுத்துவிட்டார்.

## மரண அறிவித்தல்



### திரு. இராசலிங்கம் மனோகரன்
(பெரியதம்பிரான் கோயில் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்)

இராசலிங்கம் மனோகரன் 20.02.2004 கிளிநொச்சியில் ஏற்பட்ட விபத்து ஒன்றில் அகால மரணம் அடைந்துள்ளார்.

அன்னார் இராசலிங்கம் இராசமலரின் கனிஷ்ர புதல்வனும், சுதாகரனின் அன்புத் தம்பியும், கோமதியின் பாசமிகு கணவரும், கோபிகாவின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று 22.02.2004 காலை 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்
சகோதரன் வா.கணேஸ்வரன்
(ஆசிரியர்)

(சி-2245)

சிறிமாதவன்
தற்காலிக இடமாற்றம்

T.V. டெக், வீடியோ, ஓடியோ கசெட், கசெட் ரேடியோ, சங்கீத ஓகன்கள், சகலவித கைக்கடிகாரங்கள், சுவர் மணிக்கூடுகள், பிலிம்றோல் மற்றும் அன்பளிப்புப் பொருள்கள் பெற்றுக்கொள்ளச் சிறந்த இடம்.

இதுவரை நாளும் இல.97 கஸ்தூரியார் வீதியில் இயங்கிய சிறிமாதவன் திங்கள் முதலாக ஜூம்மா பள்ளி லேன், கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம். என்ற விலாசத்தில் இயங்கிவருகிறது என்பதை அன்பர்கள்அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

சிறிமாதவன்
ஜூம்மா பள்ளிலேன்,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 6365.
(சி/2236)




BANGALORE UNIVERSITY
பெங்களூர் பல்கலைக்கழக அனுமதி தொடர்பான இலவச கருத்தரங்கு 27 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. கணனிப் பட்டப் படிப்பு தொடர்பான ஆலோசனை வழங்குகின்றார்
விரிவுரையாளர்
B.SureshKumar
New High Studies
ஆரியகுளம் சந்தி - யாழ்
(638)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 22.02.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.